கலியுகாப்த்தம் 5116
சித்திரை- வைகாசி

# இந்துக்களின் குரல்

## Voice of Hindus



இந்து தேசிய மாத இதழ்

# யார் இந்து ?

காடேறி மாடன் கறுப்பன் முனியாண்டியென
நாடொறும் பெயர் சொல்லி வாழ்பவன் இந்துவா?
பெற்ற பிள்ளையெனப் பேணி வளர்த்து வந்த
முற்றத்துக் கோழியாடுகளை பற்றின்றிப் பலியிடுபவன் இந்துவா?

நெற்றியிலே! நீறின்றி நீழ் புருவ மத்தியிலே பொட்டின்றி
வற்றிய பேச்சினாலே! வாழ்பவன் இந்துவா?
காலை மாலை வேளைதனில் கடவுள்தனை நினையாது
சாலையோரத் தவறணையே தஞ்சமென இருப்பவன் இந்துவா?

குண்டடி பட்டுக் குறையங்க முடனே! வாழும்
எம்மினத் தவர்க்கே! இரங்காதவன் இந்துவா?
முள்ளி வாய்க்கால் தனிலே! முத்தான பெற்றோரையிழந்து
பள்ளி செல்லவியலாது பரிதவிக்கும் பிள்ளைக்கு உதவாதவன் இந்துவா?

பொன் பொருளில் ஆசை கொண்டு பிறர் பொருளை களவாடி
கண்மூடி வாழ்வு வாழ்ந்தே! காலத்தைக் கழிப்பவன் இந்துவா?
தன் பொருளில் தானம் செய்தே! தரணியிலே ஏழையினை
கண்ணெனவே! வாழ வைத்த தர்மவான் இந்துவா?

அடுத்த வீட்டில் தீப்பிடிக்க நினைத்துக் கொண்டே!
அங்கிருக்கும் பொருள்தனைச் சூறையாட நினைப்பவன் இந்துவா?
மனிதநேயம் தனை மனங்களிலே! சுமந்து கொண்டே!
புனிதனாகப் பூலோகம் சென்ற பின்பும் வாழ்பவன் இந்துவா?
பிறருக்காக் கண்ணீரும் பேதமில்லாச் செந்நீரும்
உறவுக்காகச் சிந்தும் எவனோ? அவனோ! இந்து

– கவிஞர் சரசாலையூசான் –

இந்துக்களின் குரல்
Voice of Hindus

இந்துதேசியமாதஇதழ்

கோப்பாய் தெற்கு
கோப்பாய்,
யாழ்ப்பாணம்
0776584497

செட்டியார்தெரு குருக்கள்மடம்
மட்டக்களப்பு
0654909437
0755511457

மலர் - 01
குரல் - 01

ஆசிரியர் குழு
யோ.துஷ்யந்தன்
ந.ஸ்ரீந்திரன்
சிவ.சுதர்சனன்

சஞ்சிகையில் உள்ள
ஆக்கங்கள் இந்துத்துவ
தகவல்களஞ்சியத்திற்கு உரியவை

கலியுகாப்தம் - 5116
ஜய வருடம்
சித்திரை- வைகாசி

# உள்ளே ஒலிப்பவை


- இந்து சமயத்திற்கு ஓர் அறிமுகம்
- அழகிய நாட்கள் மீண்டும் வந்திடாதோ
- தமிழனின் வியத்தகு விஞ்ஞானம்
- குழந்தை வளர்ப்பில்
- கண்ணகியும் சகுந்தலையும்
- கானா நாட்டில் ஒரு இந்துக்கோயில்
- கொரிய மொழிக்கு அடிப்படை தமிழே
- நாசா VS திருநள்ளாறு
- உங்கள் பழைய பஞ்சாங்கம்
- சைவ சிம்மத்தின் கர்ஜனை
- பஞ்சாமிர்த்தில் பஞ்சமேன்?
- தக்க வயதில் திருமணம்
- கொஞ்சம் பாசம் கொஞ்சம் நேசம்
- மூச்சுப்பயிற்சி
- வீரத்துறவி பின்னணி
- சம்பாதியும் ஜடாயுவும்
- இந்துக் குடும்ப வாழ்கை நெறிமுறைகள்

ஓம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும்எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

அன்பான இந்துக்களே! வணக்கம்

எங்கு நோக்கினும், சுயநலம், பதவிவெறி, ஊழல், ஒழுக்கச் சீர்கேடு தலைவிரித்தாடுகிறது, வறுமை, அறியாமை, மூடநம்பிக்கை, சோம்பேறித்தனம். இந்துக்கள் மத்தியில் குடிகொண்டுள்ளன. கொலை கொள்கை கற்பழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் வன்முறைச் சம்பவங்கள் மலிந்து காணப்படுகின்றன. இவற்றைச் சீர்செய்யும் சமூகப் பொறுப்பில் இருந்து ஊடகங்கள் விலகிச்செல்கின்றன. மறுபுறம் சினிமா, அரசியல், சோதிடம், விளையாட்டு ஆகியவற்றையே பத்திரிகைகள் தாங்கி வருகின்றன. இத்தனைக்கும் மத்தியிலும் இந்துச் சமூகம் பற்றிச் சிந்திக்காது எதிலும் பட்டுக்கொள்ளாமல் விலகி நிற்கும் அறிவு ஜீவிகள் இன்றைய நிலையையே நிரந்தரமாக்க முயலும் சுரண்டல் இயக்கங்கள் மேலும் இந்துக்களிடமிருந்து பறித் தெடுக்கப்படும் நிலங்கள் பற்றியோ! இந்துக் குடிசனப் பரம்பலின் வீழ்ச்சி பற்றியோ சிந்திக்கத்தவறும் தலைவர்கள். திட்டமிட்டவாறு மேற் கொள்ளப்படும் மதமாற்றங்களைத் தடுக்க நாதியற்ற எம்மவர்கள் யுத்தத்தின் கோரத்தாண்டவத்தால் உருக்குலைந்து நல்வாழ்விற்காய் எங்கும் பல நூற்றுக்கணகாக இந்துக்குடும்பங்கள் எமது மக்களின் துன்பியலை பயன்படுத்தி கசிப்பு, கஞ்சா, விபசாரம் என்னும் கலாசார சீரழிவுக்கான திட்டமிட்ட செயற்பாடுகள். இந்து தமிழ் பெண்களின் பாதுகாப்பற்ற நிலை என எமது இந்துதமிழ் சமுதாயம் புதிய பல அபாயங்களை எதிர்நோக்கி நிற்கிறது.

இந்நிலைக்கான காரணங்கள் என்ன? தீர்வுகள் என்ன எனும் வினாக்களுக்கு வரலாற்றினை திரும்பிப் பார்த்தால் விடை கிடைக்கின்றது.நாமெல்லோரும் இந்து தமிழர் எனும் உயிருள்ள உடலின் பிரிக்க முடியாத உறுப்புக்கள் என்ற உணர்சியை தொலைத்தமையும் அதன் விளைவாக பரஸ்பர வெறுப்பு கருத்து முரண்பாடு பொறாமை சிறு சுயநலன்களை அடைய ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் போக்கு இவைதான் கடந்த பல நூற்றாண்டுகளுக்கு மேலாக எமது ஜீவ நாடியை அரித்து தின்றுவிட்டன. இதனையே கீதையில் கண்ணன்

"ஆத்மைவ ஹயாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந"

(பகவத்கீதை 6-5)

(இதன்பொருள் நமக்கு நண்பர்களும் நாமே பகைவர்களும் நாமே) என்கிறார். ஆகவேதான் எமது வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் வெளியில் காரணங்களைத் தேடாது "நமது வீழ்ச்சிக்கு நாமே பொறுப்பு நம்மை அழித்துவிடக் கூடிய பலவீனங்களை நாம் துடைத்து நீக்காவிட்டால் இனியும் எம்வாழ்வு சிறப்படையமாட்டாது" என்னும் அடிப்படைப் பாடத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

எமது இந்து தமிழ்ச் சமூதாயத்தை ஒற்றுமைப்படுத்தி சீர் செய்வதுடன் உலகின் எந்த சக்தியும் கெட்ட நோக்கத்துடன் ஏறெடுத்துப்பார்க்க துணியாத அளவிற்கு அதனை சக்திவாய்ந்ததாய் ஆக்க வேண்டும். இதை நிறைவேற்றுவது தான் இந்த மகத்தான சமூதாயத்தின் புதல்வர்கள் அனைவரையும் சார்ந்துள்ள தலையாய கடமை அதனை "இந்துக்களின் குரல்" சிந்திக்கும் செய்யும் சொல்லும்.

ஆசிரியர்

# இந்து சமயத்திற்கு ஓர் அறிமுகம்

சற்குருபோதிநாத வேலன் சுவாமிகள்

இந்துக்கள் இன்று பல்வேறு நாடுகளிலும் பல்வேறு சமூகத்தினர் மத்தியிலும் வாழும் நிலை உள்ளது. இந்துக்கள் சில வேளைகளில் தம் சமயத்தை விளக்கி சொற்பொழிவாற்ற கல்லூரி, பாடசாலை, சமய கலந்துரையாடல் ஏன் அந்நிய மத ஸ்தாபனங்களுக்குக் கூட அழைக்கப்படுகின்றனர். இன்னும் ஏனைய சமய மக்களுடன் விவாதிக்க வேண்டிய தருணத்தில் சிலர் தமக்கு அத்தகைய விளக்கமளிக்கும் அளவு தகுதி இல்லை எனக் கருதி விடுகின்றனர். ஆக அத்தகைய சூழல்களில் அதிகாரபூர்வமான வெறும் கல்வி நோக்கில்லாத முன்னுரை ஒன்று இந்து சமயத்திற்குத் தேவை என்பது தெளிவாகின்றது. இதனால் இக்கட்டுரையினை நமது நம்பிக்கையின் ஓர் அகண்ட சுருக்கமாகத் தயாரித்து உள்ளோம். இதிலிருந்து இந்து சமயத்தை அடிப்படை ரீதியில் மற்றவர்களுக்கு முறையாக எடுத்துச் சொல்ல உதவியாயிருக்கும் இதனால் பழங்கதைகளும் பொய்த்தகவல்களும் நீங்கிய ஓர் இந்து சமய அறிவு கிடைக்கும்.

நீங்கள் கூகுல் தேடுதலில் இந்து சமயம் என்றால் என்ன? என்று கேட்டால் ஏறக்குறைய 139000 பதில்கள் கிடைக்கும் பெரும்பாலானவை அன்னியர்களின் கைவரிசை பெருவாரி எதிர்பாளர்களின் தலைசிறந்த படைப்பாக இருக்கும் அறிவு பூர்வமானவை மிகக் குறைவு அதிலும் குறைவு அதிகாரப்பூர்வமானவை. குறுகிய நோக்கு வழக்குச்சார்| புரிந்துணர்வை கடந்த பதில்கள் அரிது கேள்வியினால் தோன்றும் பரந்த அளவு சந்தேகத்தைத் தீர்க்கும் விடைகள் மிகப்பற்றாக்குறை. இந்தக் காரணங்களுக்காகவே இந்து சமயத்துக்கு ஓர் அறிமுகம் தவிர்க்க முடியாதத் தேவையாகிவிட்டது.

இன்றைய உலகின் அனைத்து மதங்களும் உள்ளிருந்தோ வெளியிலிருந்தோ எதிர் நோக்கும் சவால்களை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மதமும் தனக்கு ஓர் ஆன்மீக நீதி நூல், மக்களின் சடங்கு, பாரம்பரிய முறைகள் கொண்டு ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு வழங்கப்பட்டு உயர்ந்த உணர்வு நிலைகளுடன் தொடர்பை நிலைநிறுத்தி இதனால் மனிதனை கடவுளுடன் தொடர்புபடுத்தி கலாச்சார பாரம்பரிய உச்ச முழு நிறைவை வாழ வைப்பதாக இருக்க வேண்டும்.

இந்த தொடர்பு ஒரு தலைமுறை தவறினாலும் ஒரு மதம் நிரந்தரமாக காணாமல் போய் தூசு படிந்த வரலாற்று, அகழ்வாராய்ச்சி, மனித ஆராய்ச்சி நூலகங்களில் மக்கிப் போக விடப்படும். "எங்கே போயின ஒரு காலத்தின் பாபிலோனிய, எகிப்திய, அஸ்டெக், மாயான், சிவப்பிந்திய அல்லது ஹவாயிய பிரதான சமயங்கள்?" அவற்றின் மிகக் குறைவானதே எஞ்சியுள்ளது. சில காலங்களுக்கு முன்னர் உலக மக்கள் தொகையின் ஆறில் ஒரு பகுதியான மனித இனத்தின் மதம் பெரும்பாலும் இந்தியாவிலும் அண்டைய நாடுகளிலும் வாழ்பவர்களின் மதம் ஒரு பில்லியன் மக்கள் கொண்டாடும் இந்து சமயத்திற்கும் இதே கதி தான் என சிலரால் அஞ்சப்பட்டும் பலரால் எதிர்பார்க்கவும் பட்டது. மத ரீதி ஆக்கிரமிப்பு மற்றும் முழுஅழிப்பு வரலாறு பழமையான பல மதங்களை துடைத்து ஒழித்த போதிலும் இந்து மதம் மட்டும் அதை எதிர் கொண்டு இன்னும் வாழ்ந்து கொண்டு இருப்பது தனித்துவமானது.முரணாகவே இந்தப் புனித மதம் 1000 ஆண்டுகளாக படையெடுப்புக்கள் சூறையாடல்கள்,

கண்மூடி ஆதிக்கம் ஆகியவற்றை அந்நிய ஆக்கிரமிப்பாளர் களிடம் இருந்து எதிர்கொண்டு தாக்குப்பிடித்தாலும் 20 ஆம் நூற்றாண்டில் மதச்சார்பின்மை மற்றும் பொருள் உலக கவர்ச்சி போன்ற சூட்சுமமான சக்திகளை சந்திக்கத் தள்ளப்பட்டு உள்ளது. கிறிஸ்துவ பிரச்சாரம் 16 வது நூற்றாண்டு இயேசுஎயிட் சமய பரப்பாளர்களால் திரித்துக் கூறப்பட்டு 19 ஆம் நூற்றாண்டு பிரிட்டிஷ் இராஜாங்கத்தால் வலுவூட்டப்பட்டு இன்றைய மேற்கத்தய மற்றும் இந்திய தகவல் சாதனங்களால் முன்னெடுக்கப்பட்டு பல காலமாக மிகு வலிமிக்க அடிகள் பெற் றுள்ளது. ஏனைய சுய மாண்பு நம்பிக் கையை தாழ்த்தி மிதித்தல் அதை மூட நம்பிக்கை மிக்க சடங்கு என தூற்றுதல் வெற்று உருவ வழிபாடு தற்காலத்திற்கு ஒவ்வாத பழமை, பண்டைய வழக்கம், கணக்கில்லாத பொய்த் தெய்வங்கள் எனக் கூறுவதே கிறிஸ்தவ முஸ்லிம்களின் தந்திரமாகும். இன்றைய ஊடகங்கள் சாதீய முறைகேட்டினையும், மோசமான சமுதாயச் சீரழிவுகளையுமம் வலியுறுத்தி இந்து என கூறும் எதனையும் அடிப்படைவாதம், தீவிரவாதம், வகுப்பு வாதம் என முத்திரை குத்துகின்றன.

ஆனால் ஓர் எதிர்பாரா இந்து எழுச்சி பூமிப்பந்தின் எல்லா பாகங்களிலும் வெடித்துள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் சில வேளைகளில் இந்துக்களின் வேற்று நாடு குடியேற்றம், மற்றும் இந்தியாவினதும் ஏனைய இந்து அல்லாத நாடுகளில் உள்ள இந்துக்களின் உண்மை உழைப்பினால் கிடைக்கும் புதிய கௌரவம் மற்றும் செல்வாக்கின் காரணமாக தற்கால தலை முறையினர் அதன் பொக்கிஷங்களை கண்டு உள்ளதாலும் அதன் காலத்திற்கேற்ற பயன்பாடமை அறிந்ததாலும் இந்து மதம் 21 ஆம் நூற்றாண்டில் ஊக்கமுள்ள ஒரு சக்தியாக நுழைந்து உள்ளது. தனது தவறுகளைத் திருத்திக் கொண்டும் பலத்தை உற்சாகப்படுத்திக் கொண்டும் இந்து சமயம் டிஜட்டல் (எண்ணியல்) உலகத்திற்குச் செல்கின்றது. தலைவர்கள் முன்னோக்கி அடி எடுக்கின்றனர். பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் இன்னும் சிறப்பாகச் செய்யவும் பலன்மிக்க வாழ்க்கை வாழவும் பெற்றோர்கள் தம் சமயத்தின் சிறந்ததை வழங்க முயற்சி செய்கின்றனர். ஆயிரக்கணக்கில் கோயில்கள் எழும்புகின்றன.

உலக அளவில் சமூகங்கள் தம் தெய்வ மூர்த்திகளை வைத்து பாரிஸ், பெர்லின், டொரொன்டோ, சிட்னி ஆகியவற்றில் ஊர்வலம் வருகின்றனர். இந்து திருவிழாக்களை பெரு அளவில் கொண்டாடுகின்றனர். அடுத்தவர்கள் தமமை வித்தியாசமாக நினைப்பார்களோ myýJ " பாகன்" என்பார்களோ என்ற கவலை இன்றி மத வேற்றுமை இன்றி யோகா அனைவராலும் பயன்படுத்தப்படுகின்றது. சொல்திறமிக்க பேச்சாளர் ஒரு பில்லியன் இந்துக்களைப் பிரதிநிதித்து அனைத்துலக சமாதானமாநாடுகளிலும், சர்வமதக் கூட்டங்களிலும், இந்து உரிமை கலந்துரையாடல்களிலும் கலந்து கொள்கின்றனர். உயர்பள்ளிக் கூடம், பல்கலைக்கழக இந்து மாணவர்கள் திரும்பி தம் பாரம்பரியத்திற்குச் செல்கின்றனர்.

கோயில்களில் இருக்கும் தெய்வங்களை நாடுகின்றனர். தம் பெற்றோர் சொன்னதால் அல்லாமல் தம் உள்ளார்ந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தன் வாழ்க்கையை மேம்படுத்த ஆத்மாவின் அழைப்பைப் பூர்த்தி செய்ய இவ்வாறு எந்தக் கட்டத்திலும் நமது சமயத்தை விளக்கிக் கூற வேண்டின் இந்த பத்தி உங்களுக்கு உதவி புரியும்.

(தொடரும்)

# அழகிய நாட்கள் மீண்டும் வந்திடாதோ?

1990 க்கு முன்பு பிறந்த நம்மை போன்றவர்களை இந்த கால குழந்தைகள் எம்மை பற்றி என்ன நினைத்தாலும் கேலி செய்தாலும் நாம் மிக மிக அதிஷ்டகாரர்களே!. தனி படுக்கையில் அல்லாமல் அம்மா அப்பாவுடன் படுத்து உறங்கியவர்கள் நாம் தான். எந்த வித உணவுப் பொருட்களும் நமக்கு ஒவ்வாமையாக இருந்ததில்லை. சமயலறை அலுமாரிகளில் குழந்தைகள் பாதுகாப்பு பூட்டு இருந்ததில்லை. புத்தகங்கள் சுமக்கும் பொதி மாடுகளாக இருந்ததில்லை.



பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வந்தது முதல் இருட்டும் வரை ஒரே விளையாட்டுதான் ரூமிற்குள் அடைந்து உலகத்தைப் பார்ப்பதில்லை. நாங்கள் விளையாடியது நிஜ நண்பர்களிடம் தான் நெட் நண்பர்களிடம் இல்லை. தாகம் எடுத்தால் எங்கும் தண்ணீர் குடிப்போம் ஆனால் போத்தலில் அடைத்த நீர் தேடியதில்லை. ஒரே ஜுஸை வாங்கி நாலு நண்பர்களும் மாறி மாறி குடித்தாலும் நோய்கள் எங்களை வந்தடைந்ததில்லை.

அதிக அளவு இனிப்பு பண்டங்களையும், தட்டு நிறைய சோறும் சாப்பிட்டு வந்த போதிலும் அதிகம் குண்டாக இருந்ததில்லை. காலில் ஏதும் அணியாமல் இருந்து நாள் முழுதும் சுற்றி வந்தாலும் காலுக்கு ஏதும் நேர்ந்ததில்லை. சிறு விளக்கு வெளிச்சத்தில் படித்து வந்தாலும் கண்ணாடி அணிந்ததில்லை. உடல் வலிமை பெற ஊட்டசத்து பானங்கள் அருந்தியதில்லை. பழம்சோற்றில் ஊற்றி வைத்த நீரைச் சாப்பிட்டே உடல்வலிமை பெற்றவர்கள். எங்களுக்கு வேண்டிய விளையாட்டு பொருட்களை நாங்களே உருவாக்கி விளையாடி மகிழ்வோம். எங்கள் பெற்றோர்கள் பண வசதி மிக்க லட்சாதிபதிகள் அல்ல.ர். ஆனாலும் அவர்கள் பணம் பணம் என்று அதன் பின்னால் ஓடுபவர்கள் அல்லர். அவர்கள் தொடர்பு கொளளும் அருகாமையில் தான் நாங்கள் இருந்து வந்தோம்அவர்கள் எங்களை தொடர்பு கொள்ள ஏலேய்ய்ய் என்ற ஒரு வார்த்தை போதுமானதாக இருந்தது அதனால் தொடர்பு கொள்ள செல்போனை தேட அவசியமில்லை. எங்களது உணர்வுகளை போலியான உதட்டசைப்பினால் செல்போன் மூலம் பறிமாறவில்லை. உள்ளத்தில் இருந்து வரும் உண்மைகளை எழுத்தில் கொட்டி கடிதமாக எழுதி தெரிவித்து வந்தோம். அதனால் சொன்ன சொல்லில் இருந்து என்றும் மாறியதில்லை. எங்களிடம் செல்போன் , டிவிடி ப்ளே ஸ்டேஷன், எக்ஸ்பாக்ஸ், வீடியோ கேம், பெர்சனல் கம்பியூட்டர், நெட், சாட் போன்றவைகள் இல்லை. ஆனால் நிறைய நிஜமான நண்பர்கள் இருந்தனர். வேண்டும் பொழுது நினைத்த நண்பர்கள் வீட்டிற்கு சென்று உணவுண்டு உரையாடி மகிழ்ந்து வந்தோம். அவர்கள் வீட்டிற்கு போவதற்கு போனில் அனுமதி பெற தேவைவில்லை.

## எதிர்பார்ப்பு



எங்கள் காலங்களில் திறமை மிக்க தலைவர்கள் இருந்தனர். அவர்கள் சமூகத்திற்காக தங்கள் செல்வங்களை செலவிட்டனர். இந்த காலம் போல சமூக செல்வங்களை கொள்ளை அடித்தவர்கள் அல்லர். உறவுகள் அருகில் இருந்து உள்ளம் நன்றாக இருந்ததால் உடல் நலம் காக்க காப்புறுதி எடுத்ததில்லை. நாங்கள் எடுத்த புகைப்படங்கள் கருப்பு வெள்ளையாக இருந்தாலும் அதில் உள்ளவர்களிடம் வண்ணமயமான நல்ல எண்ணங்கள் இருப்பதை உணரலாம். ஆனால் இப்போது எடுக்கப்படும் படங்கள் கலராக இருக்கலாம் ஆனால் அதில் உள்ளவர்களின் எண்ணங்கள் கருப்பாகவே இருக்கின்றன.



இலவசம் பெறும் பிச்சைக்காரர்களாக இருந்ததில்லை. இந்த காலங்களில் பிறந்து வளர்ந்த வந்த நாங்கள் அதிர்ஷ்டசாலிகளா இல்லையா என்பதை இப்போது சொல்லுங்கள் பார்ப்போம்.

**அந்த அழகிய நாட்கள் மீண்டும் வந்திடாதோ?**

## அறிவியல் தமிழ்

# தமிழனின் வியத்தகு "விஞ்ஞானம்"

### தொகுத்தது: கந்தையா தில்லைவிநாயகலிங்கம்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் சொல்லிய திருமந்திரப் பாடல்களிலிருந்து தமிழர்கள் எந்த அளவு அணு குறித்த ஞானம் உடையவர்கள். என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

" அணுவில் அணுவினை ஆதிப்பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங்கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலுமாமே"
- திருமந்திரம் 2008(திருமூலர்)

இதன் சுருக்கமான பொருள் "நுண்மை யான சீவனுக்குள்ளேயும், அதி நுண்மை யான அணுவுக்குள்ளும் அணுவாக ஆண்டவன் விளங்குகிறான்". நாட்டு வைத்தியர் தனது உதவியாளருக்கு "அணு அளவு பாதரசம்" சேர் எனக் கட்டளை இடுவார். இதன் கருத்து மிக மிக சிறய பகுதி என்பது பின்னத்தில் (fraction) இது 1/165580800H "6.0393475572047000618429189857761e-09

ஆகும். (நுண்மை,பொடி,சிறு துகள்கள், இம்மி, ஆன்மா எனவும் பொருள்படும்).

"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறுநாலாயிரத்து ஒன்றே"

- ஆசான் திருமூலர்

இ,வர் இங்கு குறிப்பிடடிடுருப்பது சிவனுடைய (சீவன் என்ன சிவன் என்ன வேறில்லை) வடிவைச் சொல்ல வேண்டுமாயின் ஒரு பசுவின் முடியை (மயிரை) எடுத்து அதை நூறாகக் கூறிட்டு, பின்வு அதில் ஒன்றை எடுத்து ஆயிரமாகப் பிரித்து பின் அதில் ஒன்றை நான்காயிரமாக பிரித்தால் அதில் ஒன்றே சிவனின் வடிவு என்று கூறி இருக்கிறார்.

இப்பொழுது நாம் விஞ்ஞானம் சொல்வதைப் பார்ப்போம். ஒரு ஹைட்ரஜென் (Hydrogen) அணுவின் சுற்றளவு: 0.000000212mm- ஹைட்ரஜென்

சரி இப்பொழுது நாம் திருமூலர் கூற்றுப்படி கணக்கிட்டு பார்ப்போம்.

ஒரு மனிதனின் முடியானது 40–80 மைக்ரோன் (Micron) ஆக உள்ளது. பசுவின் முடியானது சிறிது அடர்த்தியாகவே இருக்கும் எனவே நாம் 100 மைக்ரோன் என்றே வைத்துக் கொள்வோம். மயிரின் சுற்றளவு = 100மைக்ரோன்

(size of an hair = 100 Micron)
(100Micron=0.1millimeter)

NB: The term micron and the symbol μ, representing the micrometer, A micrometer (or micrometer) is 1×10"6 of a meter (SI Standard prefix "micro" = 10"6) or one-thousandth of a millimeter, 0.001 mm, or about 0.000039 inches

இப்பொழுது திருமூலர் கூறியவாறு ஒரு முடியை நூறாக பிரிப்போம்

0.1/100 = 0.001 மில்லிமீட்டர் (MM)

அதில் ஒன்றை ஆயிரத்தில் வகுப்போம்

0.001/1000 = 0.000001 மில்லிமீட்டர் (MM)

இப்பொழுது நமக்குக் கிடைத்த பதிலை நாம் நான்காயிரத்தால் வகுத்தால் சிவனின்உருவத்தின் அளவைக் காணலாம் என்கிறார். திருமூலர் 0.000001/4000 = 0.00000000025 மில்லிமீட்டர் (MM)

ஆகவே, இவர் கடவுளின் (சிவனின்) அளவாக குறிப்பிடுவது சராசரியாக 0.00000000025 மில்லிமீட்டர் (MM). இப்பொழுது இந்தக் கடவுள் எனக்கருதப்படும் அளவானது, நாம் அறிவியல் ஆய்வாளர்களால் அளக்கப்பட்ட ஹைட்ரஜென் (Hydrogen) அணுவைவிட பன்மடங்கு சிறயதாக உள்ளது. சரி அதைவிடச் சிறயதாக என்ன இருக்க முடியும் என்கிறீரகளா?... அது தான் ஹிக்க்ஸ் போசோன் என்ற பெயரில் இன்றைய ஆய்வாளர்கள் தேடிக்கொண்டு இருப்பது. நாம் பொதுவாக சொல்லுவோம் அவனின்றி ஒரு அணுவும் அசையாது என்று. இப்பொழுது ஹிக்க்ஸ் போசொனில் "Higgs Boson" சொல்வதும் அணு தனியாகச் செயல்படவில்லை. அணுவுக்குள் அணு (பரமாணு) ஒன்று உள்ளது. அது தான் காட்ஸ் பார்ட்டிகள் "God particle" " கடவுள் துகள்" என்னும் போசோன் கண்டுபிடிப்பு. அதன் அளவ இன்னும் அறியப்படவில்லை. ஒரு காலத்தில் "கடவுள் துகள்" இன் அளவு அறியும் போது தான் திருமூலர் குறிப்பிட்ட சிவனுடைய வடிவமோ என அறிய நேரிடும்.

# குழந்தை வளர்ப்பில் இந்துக்களின் கலை அறிந்த யூதர்களும் மறந்த இந்துக்களும்

## அபிமன்யு, அஷ்டாவக்கிரன் - யூதக் குழந்தைகள் அறிவியல் சாட்சிகளாய்

முதலில் இந்துக்களின் குழந்தைகள் பற்றிய அறிவியல் கண்ணோட்டத்தை பார்ப்போம், மகாபாரதக் கதையில் வரும் அபிமன்யு, வேத கால அஷ்டாவக்கிரன் ஆகிய இரு இளைஞர்களும அசைக்க முடியாத அறிவியல் உண்மைகளை உணர்த்துகின்றனர்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் தங்கை சுபத்திரைக்கும் அர்ஜுனனுக்கும் மகனாகப் பிறந்தவன் அபிமன்யு. சுபத்திரைக்கு தனது அண்ணன்மார்கள் பலராமன், கிருஷ்ணன் ஆகியோரிடம் மிகுந்த பாசம். அதிலும் கிருஷ்ணனிடம் அதிகம். அவரிடம் எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்வாள்.

இவ்வாறே அபிமன்யு கர்ப்பத்தில் இருந்தபோது ஒரு நாள் அண்ணன் கிருஷ்ணனிடம் போர்க்கலைகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள், வீரர்களுக்குச் சவால் விடும் வியூகம் என்றால் அது பத்ம வியூகம்தான் என்று கூறி அதனது முறைகள் நன்மைகள் அதை அமைக்கும் விதம் என்று கிருஷ்ணர் சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டே போனார். இதன்னை கருவில் இருந்த அபிமன்யுவும் கேட்டு உள்வாங்கிக் கொண்டான். எனினும் பத்ம வியூகத்தை பிளக்கும் முறையை சொல்வதற்குள் சுபத்திரை நல்ல நித்திரையில் ஆழந்து போனாள். இதனால் மேற்கொண்டு போர்த்தந்திரம் குறித்து பேசுவதை நிறுத்திவிட்டு கிருஷ்ணர் அங்கிருந்து அகன்றுவிட்டார். இதனாலேயே பாரதப் போரின்போது பத்ம வியூகத்துக்குள் நுழைய மட்டுமே அபிமன்யுவால் முடிந்தது. பிறகு அதனை பிளக்க முடியாமல் மற்றவர்களால் சூழப்பட்டு தாக்கப்பட்டு அவன் உயிரிழந்தான் என்று கூறப்படுகிறது.

அடுத்து அஸ்டாவகிரன் கதையை பார்ப்போம்,

வேதாந்தம் உபதேசித்த பெரியோர்களில் ஒருவர் உத்தாலகர். அவருக்கு கஹோளர் என்ற சிஷ்யர் இருந்தார். நியமமும் பக்தியும் உள்ளவர். ஆனால் கல்வி கற்கும் திறன் இல்லை. அவரை மற்ற சீடர்கள் பரிகசிப்பார்கள். ஆனால்

குரு அவரிடம் அன்புடன் இருந்ததுடன் தனது மகள் சுஜாதையை திருமணம் செய்து கொடுத்தார், சுஜாதை கருவுற்றார். அவர் வயிற்றில் வளர்ந்த குழந்தை கருவிலிருக்கும்போதே வேதத்தை அறிந்தது. கஹோளர் தப்பும் தவறுமாக வேதம் செய்ததைப் பொறுக்க மாட்டாமல் கருவிலேயே எட்டு கோணல் அடைந்து பிறந்தது. அதனாலேயே அக்குழந்தை பின்னாளில் அஷ்டா வக்கிரன் என்று அழைக்கப்பட்டது. ஆனால் அக்குழந்தை மிகுந்த புத்திசாலியாகவும் தைரியசாலி யாகவும் வளர்ந்தது.

இவ்விரு கதைகளும் இந்துக்களுக்கு

உணர்த்துவது என்ன? கருவிலிருக்கும் போதே குழந்தைகள் கற்றுக் கொள்கின்றன. அதனை ஊக்குவிக்க வேண்டும் என்பதுதானே. ஆனால் இந்து மக்கள் கேட்டார்களா? ஆனால் இதனை அப்படியே பின்பற்றி வெற்றி பெற்றவர்கள் யூதர்கள். எவ்வாறு என்று பார்ப்போம்.

தொழில்நுட்பம், இசை, விஞ்ஞானம் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் யூதர்கள் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை எவருமே மறுக்க முடியாது. உலக வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 70 % யூதர்களின் கைவசமே உள்ளது. அழகு சாதனங்கள், நாகரிக உடைகள், உணவுப் பொருட்கள், ஆயுதங்கள், சினிமாத் துறை (ஹாலிவுட் மற்றும் பல) என்று பலவற்றிலும் யூதர்கள் சிறந்து விளங்குவது நிஜம்.

ஏன் கடவுள் அவர்களுக்கு மட்டும் இந்த திறமையைக் கொடுத்தார்? இந்த திறன் தற்செயலாக வந்ததா? அல்லது ஒரு தொழிற்சாலையில் நாம் நமக்கு வேண்டிய வடிவில் ஒரு பொருளை உற்பத்தி செய்கிறோமே, அதுபோல இந்த திறமையை மனித முயற்சியால் சிருஷ்டி பண்ணிக்கொள்ள முடியுமா? இந்தக் கேள்விகள் உங்கள் மனதில் தோன்றுவது இயற்கையானதே. ஆய்வறிக்கைக் காக யூதர்கள் உட்கொள்ளும் உணவு, கலாச்சாரம், மதம், கர்ப்பிணி தன்னை தயார் செய்துகொள்ளும் விதம் என்று எல்லா விவரங்களை ஒன்று விடாமல் துல்லியமாக சேர்ப்பதற்கு 8 ஆண்டுகள் பிடித்தன. இந்த விவரங்களை மற்ற இனங்களுடன் ஒப்பிட்டு பார்க்க முடிவு செய்தோம்.

தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஒரு மேதாவியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கர்ப்பிணி முதலிலிருந்தே தன்னை தயார் செய்து கொள்ளுகிறாள். அவள் எப்போதும் பாடிக்கொண்டும் பியானோ வாசித்துக் கொண்டும் இருப்பாள். கணவனுடன் சேர்ந்து சிக்கலான கணித வினாக்களை விடுவிக்க முயற்சி செய்வாள். தான் போகுமிடமெல்லாம் கணக்குப் புத்தகத்தை எடுத்துச் செல்வாள். கருவிலிருக்கும் போதே பயிற்சி கொடுத்தால் பிற்காலத்தில் குழந்தை மேதையாக ஆகும் என்பது அவர்களின் நம்பிக்கை, குழந்தை பிறக்கும் வரை விடாது கணித புதிர்களை விடுவித்துக் கொண்டே இருப்பாள்.

கர்ப்பிணியின் உணவும் விசேஷமானது: பாலில் பாதாம்பருப்பு முதலான கொட்டை வகைகளையும், பேரீச்சையையும் கலந்து உண்கிறாள். மதிய உணவுக்கு தலை துண்டிக்கப்பட்ட மீன், பிரெட், பாதாம்பருப்பும், மற்ற கொட்டை வகைகளும் (nuts) சேர்த்த பச்சைக் காய்கறிக் கலவை (Salads) ஆகியவற்றை உண்ணுகிறாள்.

மீன் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்லது என்று நம்புகிறார்கள்: ஆனால் மீனின் தலை மூளைக்கு நல்லதில்லையாம் கர்ப்பிணி பெண் மீன் எண்ணெய் உட்கொள்ளுவது யூத இனத்தின் வழக்கம். மீனின் சதைப்பாகத்தையும், எலும்பு இல்லாத பகுதிகளையும் மட்டுமே சாப்பிடுகிறார்கள்: இறைச்சி சாப்பிடுவதில்லை. இறைச்சி மீன் இரண்டையும்

ஒன்றாக சாப்பிடுவது நம் உடலுக்கு எந்த விதத்திலும் பயனளிக்காது என்று நம்புகிறார்கள்.

உணவு உண்ணுவதற்கு முன் பழங்கள் சாப்பிடுகிறார்கள். முதலில் பிரெட், சாதமபோன்றவற்றை சாப்பிட்டால் தூக்கம் வரும்: அதனால் பள்ளியில் சொல்லித் தரும் பாடங்கள் சரிவர புரியாது என்கிறார்கள். இசைக்கருவி வாசிக்கும் பழக்கம் குழந்தைகளின் IQ (Intelligence quotient) வை அதிகரித்து, அவர்களை மேதைகள் ஆக்கும். இசை அதிர்வுகள் மூளையை தூண்டிவிட்டு அதன் திறன்பாட்டை அதிகரிப்பதால்தான் யூதர்களிடையே மேதைகள் அதிகம் என்கிறார் ஒரு யூத விஞ்ஞானி.

முதல் வகுப்பிலிருந்து 6 ஆம் வகுப்புவரை குழந்தைகள் வணிகக் கணிதவியலை படிக்கிறார்கள். விஞ்ஞானப்பாடம் முன்னுரிமை பெறுகிறது கலிபோர்னியா குழந்தைகளையும் யூதக் குழந்தைகளையும் ஒப்பிட்டு பார்த்தால் கலிபோர்னியா குழந்தைகள் 6 வருடம் பின் தங்கி இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

யூதக்குழந்தைகள் வில்வித்தை, துப்பாக்கி சுடுதல் ஆகிய உடல், மனம் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். இவ்விரண்டு விளையாட்டுக்களும் மனதை ஒரு முகப்படுத்தி துல்லியமான நுட்பமான முடிவு எடுக்க உதவுகின்றன.

உயர் நிலைப்பள்ளியில் மாணவர்கள் விஞ்ஞானம் படிக்க அதிகம் விழைகிறார்கள்.

போர்த்தளபாடங்கள், மருத்துவம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் செயலாக்கங்கள், (Projects) புதிதாக பொருட்கள் செய்து (Product Creation) என்று பல்வேறு முறைகளில் தாங்கள் படித்தவற்றை நடைமுறைப் படுத்துகிறார்கள். இந்தத் திட்டங்கள் உயர் கல்வி நிறுவனங்களிலும், பல்தொழில்நுட்ப கழகங்களிலும் அறி முகப்படுத்தப்படுகின்றன. வணிகம் சொல் லித்தரும் ஆசிரி யருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது வணிகவியல் படிக்கும் மாணவர்கள் கடைசி வருடம் ஒரு செயல் முறை திட்டத்தை நடை முறைப்படுத்தி காட்ட வேண்டும்: 10 பேர்கள் அடங்கிய அவர்களது குழுமத்திற்கு இந்த செயல் மறை திட்டத்தில் 10 மில்லியன் யு.எஸ். டொலர் லாபம் கிடைத்தால் தான் அவர்கள் தேர்வு பெறுவார்கள்.

இந்தக் காரணத்தினாலேயே உலக வர்த்தகத்தில் பாதிக்கும் மேல் யூதர்கள் வசம் இருக்கிறது உலகப்புகழ்பெற்ற லீவாய்ஸ் (Levis) பொருட்கள் இஸ்ரேல் பல்கலைக்கழக வர்த்தகம் மற்றும் புதிய பாணி உடை வடிவமைப்பு (business and fashion) ஆசிரியர்களால் உருவாக்கப் பட்டதாகும்.

யூதர்கள் பிரார்த்தனை செய்யும் போது கவனித்து இருக்கிறீர்களா? எப்போதும் தலையை அசைத்து அசைத்துப் பிரார்த்தனை செய்வார்கள். இப்படிச் செய்வதால் மூளை தூண்டிவிடப்பட்டு மூளைக்கு அதிக ஒக்ஸிஜன் கிடைக்குமாம்.

இவர்களைப் போலவே ஜப்பானியர்களும் சிரம் தாழ்த்தி வணங்குபவர்கள். சுஷி உணவை(புதிதாகப் பிடிக்கப்பட்ட மீன் உணவு) விரும்பி உண்பார்கள். இந்த இரண்டு இனங்களுக்கும் பல ஒற்றுமை இருப்பதை தற்செயல் என்று சொல்லலாமா? நியூயோர்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனம் அவர்களுக்குப் பல வகையில் உதவுகிறது. யாருக்காவது பயன்தரும் வர்த்தக யோசனை இருந்தால் வட்டி இல்லாக்கடன் கொடுத்து அவர்களது வர்த்தகம் தழைக்க எல்லா வகையிலும் உதவுகிறது. இதனாலேயே ஸ்டார்பக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ், கோகோகோலா, DKNY, ஆரக்கிள், லீவாய்ஸ், டன்கின் டோனட், ஹாலிவுட் படங்கள் மற்றும் பலநூற்றுக்கணக்கான வர்த்தகங்கள் இவர்களது ஆதரவில் நடை பெறுகின்றன.

யூத மருத்துவ பட்டதாரிகள் நியூயோர்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனத்தின் வட்டியில்லாக் கடமைப் பெற்று தனியாக டாக்டர் தொழில் நடத்தலாம். இதனால் நியூயோர்க் கலிபோர்னியா நகரங்களில் மருத்துவ மனைகளில் போதுமான டாக்டர்கள் இருப்பதில்லை.

சிங்கப்பூர் இங்கு சிகரெட் பிடிப்பவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே பார்க்கிறார்கள். இஸ்ரேல் நாட்டைப் போலவே இங்கும் சிகரெட் பிடிப்பது தீய பழக்கம் என்று கருதப்படுகிறது. ஒர சிகரெட் பெட்டியின் விலை 5 யு.எஸ். டொலர்கள்! அரசாங்கமும் இஸ்ரேல் நாட்டு அரசாங்கம் போலவேதான் சிங்கப்பூர் மிகச்சிறிய நாடு: மன்ஹாட்டன் அளவே இருந்தபோதும் உலகத்தரம. வாய்ந்த பல்கலைக்கழகங்கள் இங்கு இருக்கின்றன. இந்தோனேஷியாவைப் பாருங்கள். ஒரு பாக்கெட் சிகரெட்டின் விலை வெறும் 0.70 யு.எஸ். டொலர்தான். எங்கு பார்த்தாலும் மக்கள் சிகரெட் பிடித்துக் கொண்டு இருப்பார்கள். பலன்?.

லட்சக்கணக்கான மக்கள் தொகை இருந்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் பல்கலைக்கழகங்கள்: பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய தொழில் நுட்பமோ, தயாரிக்கும் பொருட்களோ எதுவுமே இல்லை அவர்களிடம்! அவர்களது மொழியைத் தவிர வேறு மொழி தெரியாது. அங்கில மொழியைக் கற்றுக் கொள்ள எத்தனை சிரமம்படுகிறார்கள். இவையெல்லாம் சிகரெட் பிடிப்பதால்தான் சிகரெட் பிடிப்பவர்களின் அடுத்த தலைமுறை அறிவற்றதாகத்தான் இருக்கும். சற்று சிந்தித்துப் பாருங்கள். நம்மால் யூதர்களைப் போன்று புத்திசாலி தலைமுறையை உருவாக்க முடியுமா?

# கண்ணகிக்கும் சகுந்தலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பொதுவாகவே பெண்கள் தேவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் பேசிக் கொண்டே இருப்பார்கள் என்ற பொதுவான குற்றச்சாட்டு ஒன்று உள்ளது. ஆனால், பண்டைய இலக்கியங்களில் வரும் பெண்கள் ரத்தினச் சுருக்கமாகப் பேசவும்



தெரியும், நீட்டி முழக்கி, சுற்றி வளைத்துப் பேசவும் தெரியும் எனபதை நிருபித்திருக்கிறார்கள்உதாரணத்துக்கு: கண்ணகி தன் கணவன் கொலை செய்யப்பட்டான் என்ற செய்தி கேட்டுக் கொதித்தெழுந்து, பாண்டியன் நெடுஞ்செழியனிடம் நீதி கேட்கச் செல்கிறாள்.



பாண்டியன், " நீரவார் கண்ணை எம்முன் வந்தோய்... யார் நீ?" என்று ஒரு கேள்விதான் கேட்டான். அதற்குக் கண்ணகி. "தேரா மன்னா" என்று ஆரம்பித்து, தன் குலம், கோத்திரம் தொடங்கி, ஊழ்வினையை இழுத்து, "உன்னால் கொலை செய்யப்பட்டவன் மனைவி" என்று ஆதியோடந்தமாய் ஒரு கேள்விக்கு ஒன்பது பதில்கள் சொல்லி பாண்டியனைத் திணறடித்தாள்!

இதற்கு நேர் எதிராக. காட்டில் கந்தர்வ மணம் புரிந்து மனைவியையும், மகனையும் மறந்து நாட்டை ஆளுகின்றான் துஷ்யந்தன். மனைவி சகுந்தலை தன் மகனுடன் அரசன் துஷ்யந்தன் சபைக்குச் செல்கிறாள். அப்போது துஷ்யந்தன், " பெண்ணே நீ யார்? எதற்காக வந்தாய்? இந்தக் குழந்தை யார்? இதற்கும் உனக்கும் என்ன தொடர்பு? எனப்பல கேள்விகள் கேட்கிறான். இவ்வளவு கேள்விகளுக்கும் சகுந்தலை சொன்ன ஒரே பதில்."மகனே! உன் தந்தைக்கு வணக்கம் சொல்"!

துஷ்யந்தன் கேட்ட பல கேள்விக்கு ஒரே பதிலைச் சொல்லி துஷ்யந்தனை திணறடித்தாள். என்னவொரு நெத்தியடியான பதில்!


பாண்டிய மன்னன் கேட்ட ஒரு கேள்விக்கு பல பதில்களை சொல்லி, நேரத்தை வீணடித்த கண்ணகிக்கும், பல கேள்விகளுக்கு ஒரே பதிலைச் சொல்லி கேள்வி கேட்டவரையே திணறடித்த சகுந்தலைக்கும் உள்ள வித்தியாசம் இது தானுங்கோ.

# கானா நாட்டில் ஒரு இந்துக் கோயில்

கானா மேற்கு ஆப்பிரிக்காவிலிருக்கும் ஒரு சிறிய நாடு. அதன் தலைநகர் அக்ரா ஒரு அழகிய கடற்கரை நகரம். அந்த




நகரின் வடக்குப் பகுதியில் சர்ச் கோபுரங்களைப் போல் கூரான உயர்ந்த வெள்ளைக்



கோபுரம். அதன் உச்சியில் ஒளிரும் ஓம் சின்னம் உள்ளே சன்னதியில் விக்கிரகங்களுக்குப் பட்டாடை அருகில் சிறு விளக்குகள். மாலை பூஜைக்கு முன்னதாகப் பிரார்த்தனைப் பாடல்கள்.

இந்தியர் வாழும் ஒரு வெளிநாட்டில் அவர்களுக்காக ஒரு இந்துக் கோவில் இருப்பதும் அதில் சிறப்பாக வழிபாடு நடைபெறுவதும் ஆச்சரியமான செய்தி இல்லை. ஆனால், இந்தக் கோவிலில் பிரார்த்தனை பாடல் பாடி வழிபாட்டுக்காகக் காத்திருப்பவர்களில் யாரும் இந்தியர் இல்லை. அவர்களுக்கு இந்திய மொழி எதுவும் தெரியாது. அது மட்டுமில்லை அவர்களில் பலர் இந்தியாவையே பார்த்ததில்லை. பின் எப்படி இந்த கோவில்?கானா நாட்டின் [ d j n j hi f 2.3 Nfhb. m j p ; 60% கிறிஸ்தவர், 15% முஸ்லீம்கள், 25% ஆப்பிரிக்கப் பழங்குடி மதத்தின் வம்சாவளியினர்.

எல்லா காலணித்துவ நாடுகளையும் போல ஆங்கில ஆதிக்கத்தின் துணையுடன் மத மாற்றத்தால் கிறிஸ்த்துவ மதம் பரவிய நாடு அது.

அதில் ஒரு சாதாரண விவசாய குடும்பத்தில் 1937 இல் பிறந்த கெவிஸி ஈஸெல் (Guide Kwesi Essel) இன் தாய் கிறிஸ்தவர். உண்மையை அறிய கெவிஸி மேற்கொண்ட நீண்ட பயணத்தில் 1962 இல் ரிஷிகேஷிலுள்ள சிவானந்த ஆஸ்ரமத்துடன் தொடர்பு கொண்டார். இந்துவழி பிரார்த்தனைக்காக சங்கம் ஒன்றை ஆப்பிரிக்காவில் ஏற்படுத்தினார். இந்தியாவிற்கு 1970 இல் வந்து ஆன்மீகததேடலில் அவர் அடைந்த இடம் ரிஷிகேஷ் சிவானந்தர் ஆஸ்ரமம்.

இரண்டாண்டு தீவிர பயிற்சிக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து தாய் நாடு செல்லும் போது இந்து மதத்தை ஏற்றுக்கொண்டவர். தன் நாட்டின் தலைநகரில் இந்து மதம் பற்றி சொற்பொழிவுகள்ஆற்றிவந்தார்.

தொடக்கத்தில் படித்தவர்கள் மட்டுமே கலந்து



சுவாமி கானானந்த சரஸ்வதி

கொண்ட கூட்டங்களுக்கு நாளடைவில் எல்லா தரப்பு மக்களும் வர தொடங்கினர்.

1975 இல் இந்தியாவிலிருந்த கானா வந்த ஸ்வாமி கிருஷ்ணாநந்த சரஸ்வதி இவருக்கு தீட்சை வழங்கி சுவாமி கானானந்த சரஸ்வதி (ளுறயஅை புாயயெயெனெ ளுயசயளறயவை) எனப் பெயரிட்டு ஆப்பிரிக்க இந்து ஆஸ்ரமத்தை தொடக்க உதவி செய்து, பணியை தொடரச் சொல்லிவிட்டு இந்தியா திரும்பிவிடுகிறார்.ஆச்சரியமான விஷயம் கிருஷ்ணானந்த சரஸ்வதிக்கு இவரை முன்பின் தெரியாது. அவர் கானா வந்ததும் வேறு பணிக்காக. அன்று முதல் இந்த ஆஸ்ரமத்தின் தலைமைத் துறவியாகயிருந்து இந்து மதத்திற்கு தொண்டாற்றி வருகிறார். சுவாமி கானானந்த சரஸ்வதி கானாவில் இருப்பது 12,500 இந்துக்கள் இதில் 10,000 பேர் இவரைப்போல ஆப்பிரிக்க வம்சாவழி சார்ந்தவர்கள்.

இவருடைய இந்த ஆஸ்ரம உறுப்பினர்களாகச் சேர்ந்த பல மதத்தினரும் இந்துவாகி இருக்கிறார்கள்.

"யாரையும் இந்து மதத்திற்கு மாற்ற முடியாது. ஏனெனில் மற்றதைப்போல அது வெறும் மதமில்லை. அது ஒரு வாழ்க்கை முறை. ஒருவார பயிற்சிக்குப் பின்னர் இந்துவாக வாழவிரும்புவர்களை ஏற்று தொடர்ந்து இந்துவாக வாழ அவர்களுக்கு உதவி செய்கிறோம்" என்கிறார் சுவாமி. இந்து விழாக்கள், பண்டிகைகள் பற்றிய விளக்கங்கள் பண்டிகைக்கு சில நாட்கள் முன்னதாகவே கூட்டங்களில் விளக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றன. முக்கியமான விஷயம் கூட்டங்களும் பாடல்களும் உள்ளூர் மொழியில் தான்.

தங்கள் குழந்தைகளுக்கு ராமர், கிருஷ்ணர் எனப் பெயர் சூட்டி மகிழும் இந்த " இந்து" க்களில் பலருக்கு கிறிஸ்தவப் பெயர்தான். இறந்தபின் உடலை ஏரியூட்டுவது என்பதை ஏற்றுக் கொண்ட இந்துக்களுக்கு இறுதிக் கடன்களை செய்கிறது. இந்த ஆஸ்ரமம் நாட்டின் பிற நகரங்களில் 5 கிளைகளுடன் இயங்கும் இவர்களுக்கு உள்ளூர் இந்தியர்களின் கோவில்களிலிருந்து நல்ல ஒத்துழைப்பு இல்லை என்பது தான் வருத்தம்.

எங்கோ ஆப்பிரிக்காவில் வேறுமதத்தினராக பிறந்து இந்தியா வந்து இந்துமத பெருமையை உணர்ந்து அதை தன் தாய் நாட்டில் வேரூன்றச் செய்யும் இந்த சுவாமி கானானந்த சரஸ்வதி இந்து மதத்தின் ஒரு பெருமையான அடையாளம்.

# கொரிய மொழிக்கு அடிப்படை தமிழே!
## வியக்கும் கொரிய தமிழ் ஆய்வாளர் ஜங் நம் கிம்.

கொரிய மொழிக்கு அடிப்படை தமிழே! கொரிய மொழிக்கும் தமிழுக்கும் வெகு நெருக்கமான உறவுள்ளது. இங்கிலீஸ் தமிழ் அகராதியையும், Passive Voice தமிழ் அகராதியையும் படித்தால் சுமார் 500 வார்த்தைகள் கொரியனும், தமிழும் ஒரே உச்சரிப்பு, ஒரே பொருளை உடையதாக இருக்கிறது. இது மிகவும் ஆச்சரியமான ஒன்று. உதாரணமாக, அப்பா, அம்மா இரண்டும் கொரியனிலும் அதே உச்சரிப்புதான் கொஞ்சம் கொஞ்சம் கொரியனில் சொகோஞ், சொகோஞ் வலியை வெளிப்படுத்துவதற்கு கொரியனிலும், தமிழிலும் ஒன்றுதான், நீங்கள் அதிர்ச்சி, ஆச்சர்யம் ஆகிய உணர்வை வெளிப்படுத்துவதற்கு அம்மம்மா... என்று வார்த்தையை பயன்படுத்துவீர்கள். கொரியனிலும் அதேதான் இது போல நிறைய இருக்கின்றன.

இன்னொன்று நீங்கள் குழந்தையை தூங்க வைக்க தாலாட்டுப் பாடுவீர்கள். கொரியனில் தாலேதா பொருள் ஒன்று உச்சரிப்பும் ஒன்றுதான். மலை ஏறுவதற்கு தமிழில் ஏறு என்று சொல்வீர்கள். கொரியனில் ஓறு, இன்னொன்றும் தவறு செய்தவர்களை தண்டிக்க கைது செய்வார்கள். கொரியனில் கதுதா நாள் கொரியனிலும் நாள் தான். அச்சச்சோ என்பது கொரியனில் அச்சா, சோறு என்பது கொரியனில் சாறு பாம்பு கொரியனில் பேம்ப் Wife மனைவி கொரியனில் மனோரா இன்னும் பல பல ஒற்றுமைகள் உள்ளன.

கொரிய நாகரீகமும், தமிழர் நாகரீகமும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. வீட்டில் மங்கள நிகழ்ச்சிகள் நடக்கும் போது இங்கே மாவிலைத் தோரணம் (Mango Leaves) கட்டுவார்கள், சொல்லப் போனால் கொரியனில் மாங்காய் கிடையாது. காரணம், குளிரான பகுதி ஆதலால் மிளகாயை தோரணமாக கட்டுவார்கள். அதற்குப் பெயரும் மாவிலை தோரணம்தான். Salt தமிழில் உப்பு அந்த காலத்தில் (Old Tamil) சொக்கம், உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? உங்கள் தாத்தா, காலத்தில் நடைமுறையில் இருந்தது ஆச்சரியம் என்னவென்றால் கொரியனிலும் அதேதான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் ரோமானியர்களுடன் வியாபாரம் செய்து வந்திருக்கின்றனர். மேற்கில் ரோமானிய பேரரசும், கிழக்கில் சீனப் பேரரசும் இருந்திருக்கிறது. இந்த இரண்டு பேரரசுகளுக்கும் இடையில் தமிழ்ப் பேரரசு இருந்திருக்கிறது. தமிழர்கள் மிகச் சிறந்த கடலோடிகளாக இருந்திருக்கிறார்கள். 1973 இல் ரோபர்ட்வர்சிங் என்ற உலகப் புகழ் பெற்ற அமெரிக்க அறிஞர், ஏன்சியன்ட் இந்தியா அண்ட்இட் இன்புளுயன்ஸ் இன் மார்டன் டைம்ஸ் என்ற புத்தகத்தை எழுதினார். இதை ப்ரங்கிளின் வார்ட்ஸ் இன் கார்பரேசன் எனும் பதிப்பகம் வெளியிட்டது. இந்தப்புத்தகத்தில் 57 வது பக்கத்தில், சில தமிழ் மன்னர்களிடம் ரோமன் வீரர்கள் பணிபுரிந்ததாக குறிப்புக்கள் உள்ளன.

தமிழர்கள் மிகவும் பலமானவர்கள் தமிழர்கள் இந்தோ சைனா உறவில் மேம்பட்டவர்களாக இருந்தனர். பாலி மொழி அறிந்திருந்தனர். கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுகளுடனும் நல்ல உறவில் இருந்தனர். இங்கெல்லாம் பல கோயில்களை தமிழர்கள் உருவாக்கியிருந்தனர். கம்போடியாவில் உள்ள உலகப்புகழ் பெற்ற அங்கோர் வாட் கோயில் இன்று இந்து கலாச்சார சுற்றுலாத்தலமாகும்.இது தமிழர்களின் உதவியால் உருவானதுதான்.

Chimpa அரசு இந்து அரசுதான். இது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இது ஏறக்குறைய 1600 ஆண்டு காலம் நீடித்தது. இது தமிழர்களால் உருவாக்கப்பட்டு கட்டிக்காக்கப்பட்டு வந்தது. தமிழர்கள் வியாபார நிமித்தமாக தெற்கு சைனாவிற்கு வந்தனர். இறுதியாக தென் கொரியாவுக்கும் ஜப்பான் தீவுகளுக்கும் வந்தனர். கொரியாவின் வரலாற்றை இரண்டு புத்தகங்களில் தெளிவாக பார்க்க முடியும் ஒன்று சங்யுஸ் ஊசா மற்றொன்று, சங்யுஸ் ஷகி இந்தப் புத்தகங்களில் உள்ளபடி தென் கொரியாவின் முதல் அரசு கயா அரசுதான்.

இது இந்தியாவில் இருந்த வந்தவர்களால் உருவாக்கப்பட்டது. நிச்சயமாக இது தமிழ்நாட்டிலிரந்து வந்தவர்களால் உருவானது தான். அதற்கு பல சான்றுகள் உள்ளன. அங்கு சிங்களம், கன்னடம், தெலுங்கு போன்றவை இருந்ததற்கான அடையாளங்களே இல்லை. பொதுவாகவே சீனாவும் கொரியாவும் நீண்ட காலம் அரசியல், கலாசாரம் போன்றவற்றில் நெருங்கிய தொடர்புடையவை. கொரியாவில் இருக்கும் பழக்க வழக்கங்கள் பல சீனாவில் இல்லை கொரியா மட்டுமே தமிழ் கலாச்சாரத்தோடு கலந்து இருந்ததை காணமுடிகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு கயா அரசுக்குவெகு அருகில் உள்ள ஷில்லா அரசு இதன் மன்னராக இருந்தவர் சொக்தரை சொக் என்பது சொக்கலிங்கம் தான். சொக்கலிங்கம் என்பது தமிழ் சமூகத்தில் மிகவும் அறிமுகமான ஒன்று சொக்கலிங்கம் என்பதன்சுருக்கம் சொக்கன். சொக்குடும்பங்கள் இன்னமும் தென் கொரியாவில் வாழ்ந்து வருகின்றன. ஷில்லா அரசின் முதல் மன்னர் சொக்தரை எனும் சொக்கலிங்கம் துரைதான். ஆகவே சொக்துரை நிச்சயம் தமிழ்நாட்டில் இருந்து வந்தவர்தான். இதனால் தான் கொரிய மக்கள் தமிழ்மொழி, தமிழ் கலாச்சாரத்தை அறிந்து அதை கடைப்பிடிக்கும் சூழ்நிலைகள் உருவாகியிருக்க வேண்டும். 2000 ஆண்டுகளாக இந்த பழக்க வழக்கங்கள் கொரியன் சமூகத்தில் மாறாமல் இருந்து வருகின்றன. இது வரலாற்று உண்மை கற்பனை அல்ல. மலையாளம், சிங்களம், தெலுங்கு கலாச்சாரம் கொரியனில் இல்லை. தமிழ் கலாச்சாரம் மட்டும் தான்.

கொரிய மொழி தோன்றி 2000 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அது பேச்சு மொழியாகவே நீண்ட காலம் இருந்து வந்திருக்கிறது. எழுத்து வடிவில் 600 ஆண்டுகளுக்கு முன்புதான் கொண்டுவரப்பட்டது. அப்போது இருந்த மன்னர் சேஜோங் என்பவர்தான் சீன எழுத்துக்களை பின்பற்றி கொரியாவுக்கு எழுத்துக்களை உருவாக்கினார். பிரஞ்சு மொழிக்கு ஆங்கில எழுத்துக்களின் வரிவடிவங்களை பயன்படுத்துவது போல கொரிய மொழிக்கு சீன மொழியின் வரிவடிவங்கள் பயன்படுத்தப்படுகிறது. தமிழின் அடிப்படையில் அமைந்த சொற்கள் சீன வரிவடிவத்தில் பயன் படுத்தப்படு வதால்தான் அந்த எழுத்துக்களுக்கான பொருள் கொரிய மொழியில் வேறுபடுகிறது. மொழிக்கு ஒலி வடிவந்தான் அடிப்படை என்பதால், கொரிய மொழிக்கு அடிப்படை தமிழே!தமிழர்களை பணிவுடன் கேட்டுக் கொள்வதெல்லாம் அவர்களும் கொரிய மொழி கற்றுக் கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு அது மிகவும் சுலபம் இது தொடர்ந்தால் தமிழர்கள் கொரியர்கள் இருவருக்கும் இடையில் உறவு பலப்படும்.


# நாசா VS திருநள்ளாறு

" இன்று பல நாடுகள் செயற்கைகோள்களை விண்வெளிக்கு அனுப்பி வருகின்றன. அவற்றில் செல்போன் பயன்பாடு, ராணுவ பயன்பாடு, உளவு என பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்க செயற்கைகோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதியை கடக்கும் போது மட்டும் 3 வினாடிகள் ஸ்தம்பித்துவிடுகிறது. 3வினாடிகளுக்கு பிறகு வழக்கம் போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அதன் செயற்கைக்கோளில் அதன் கருவிகளில் ஏற்படுவதில்லை.



இந்த சம்பவம் நாசாவிற்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது.இது எப்படி சாத்தியம்??? என்பதை ஆராய்ந்து கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல உலகையே மிரள வைத்தது.ஆம்! எந்த ஒரு செயற்கைகோளும் பூமியில் இந்தியாவின் தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி – திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பநேஷவரர் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் 3 வினாடிகள் மட்டும் ஸ்தம்பித்துவிடுகின்றன. அப்படி நிகழவதற்கு என்ன காரணம்???

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் கண்ணுக்கு தெரியாத கருநீலகதிர்கள் அந்த கோவிலின் மீது



விழுந்துகொண்டே இருக்கிறது. இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனி பெயர்ச்சியின் போது இந்த கருநீலகதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும் விண்வெளியில் சுற்றி கொண்டிருக்கும் செயற்கை கோள்கள் இந்த கருநீலகதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும் போது ஸ்தம்பித்து விடுகின்றன.

அதே நேரத்தில் செயற்கை கோள்களுக்கு எந்த விதபாதிப்பும் ஏற்படுவதில்லை. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்த கோவில்தான் இந்துக்களால் “சனிபகவான்” தலம் என்று போற்றப்படுகிறது. இ.ந்த சம்பவத்திற்கு பிறகு நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். மனிதனை மீறிய சக்தி உண்டு என்பதை உணர்ந்தனர். இன்று வரை விண்ணில் செயற்கைகோள்கள் திருநள்ளாறு பகுதியை கடக்கும் போது ஸ்தம்பித்து கொண்டே இருக்கிறது”

## விஞ்ஞானமும் மெய்ஞானமும்

இந்த செய்தியை கேட்டு பிரமிக்காதவர்கள் நம்முறைய முன்னோர்களை நினைத்து கட்டாயம் பிரமிக்க வேண்டும். நாம் பல செயற்கைகோள்கள் கொண்டு கண்டறியும் சனிகோளின் கதிர்வீச்சு விழும் பகுதியை கண்டுபிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி, கதிர்வீச்சுக்கள் அதிகம் விழும் நாட்களையும் கணக்கிட்டு அதற்கான நாளை சனிபெயர்ச்சி என்று அறிவிக்கும் திறமையை நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஒரு தொலைநோக்கு பார்வை கொண்ட நம் முன்னோர்களை நினைத்து எம்மால் பிரமிக்காமல் இருக்க முடியாது.

## மனோபாவம்

மூன்று சிற்பிகள் கோவில் சிலைகளை வடித்துக்கொண்டிருந்தார்கள். "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என மூவரிடமும் வினாவப்பட்டது.

ஒருவர் சொன்னார். வயிற்றுப்பிழைப்புக்காக இந்த சிலையை செதுக்கிக்கொண்டிருக்கிறேன்.

இரண்டாம் நபர் சொன்னார் நல்ல சம்பளம் தருகிறார்கள் சிலை செய்துகொண்டிருக்கிறேன.


மூன்றாம் நபர் சொன்னார் தெய்வம் குடிகொள்ளும் இக்கோயிலில் பக்தர்களின் வழிபாட்டுக்கான சாமி விக்கிரகத்தை வடித்துக்கொண்டிருக்கறேன்.

இம்மூன்று சிற்பிகளும் செய்யும் தொழில் ஒன்றே ஆனால் மனோபாவம் வேறுபடுகின்றது.

யோஹ கர்மஸு கௌசலம் என கீதையில் கிருஸ்ணர் கூறுகிறார். அதாவது செய்வதைச் சீருடன் செய்வதே யோகம்.

# உங்கள் பழைய பஞ்சாங்கம்

ஐயா, நீங்கள் இந்த பழைய பஞ்சாங்கத்தைப் பாடுவதை விடுங்கள் இன்றைய நவீன யுகத்துக்குத் தக்கவாறு எதாவது உபயோகமாக தாருங்கள் என்று நண்பர்கள் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். பஞ்சாங்கம் என்றால் என்னவென்று தெரிந்தால் அவர்கள் அப்படிக் கூறியிருக்க மாட்டார்கள். பஞ்சாங்கம் என்பது நம் முன்னோர்களின் வானியல் ஞானத்தை உலகுக்கு பறை சாற்றும் விண் ஞான சாஸ்திரமாகும். நம் ரிஷிகளும், சித்தர்களும், கணித மேதைகளும் 5,000 ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு விஞ்ஞானத் துறைகளில் ஞானம் பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். அதில் கணிதமும், வானியலும் அடங்கும். பூஜ்ஜியம் கண்டு பிடிக்கப்பட்டதே நம் இந்துக்களால்தான். 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போதாயனா, 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியப்பட்டர் போன்றவர்கள் பல அரிய கணித சூத்திரங்களைத் தங்கள் நூல்களில் தந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் நுர்ல்களில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தங்கள் முன்னோர்களான ரிஷிகளின் ஏடுகளில் இருந்தே இத்தகைய வானியல் மற்றும் கணித முறைகளைக் கற்றுத் தெரிந்து கொண்டதாகச் சொல்கிறார்கள். ஆரியப்பட்டர்தான் ஒரு வருடம் 365 நாட்களைக் கொண்டது என்று தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவரின் கணிதம் மற்றும் வானியல் சுவடிகளைக் ஹாலந்து தேசத்திற்கு கடத்திச் சென்று விட்டனர். 1874 ஆம் ஆண்டுதான் அங்கிருந்த நடுநிலையாளர்கள் அவரின் சுவடிகளை லெயிடன் என்ற நகரில் நூலாக வெளியிட்டனர். பிறகு அது 1879 ஆம் ஆண்ட பிரஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பாரிஸில் வெளியிடப்பட்டது. ஆதற்குப் பிறகுதான் ஆரியப்பட்டரை இந்தியர்களுக்கேத் தெரிய வந்தது. ஆரியப்பட்டரின் கணக்குப்படி பூமியின் சுற்றளவு 3,300 யோசனை தூரம். அதாவது 26,800 மைல்கள் தற்காலிக விஞ்ஞானிகளின் கணக்கிற்கு இது ஏறக்குறைய சமமாகவே உள்ளது. அதற்கும் முன்பாக இராமாயணம், மகாபாரதம் போன்ற புராண காலத்திலேயே நம் மக்கள் வானியல் அறிவு அறிவு பெற்றவரகளாகத் திகழ்ந்துள்ளார்கள். கி.ர 8756 ஆம் ஆண்டு வாழ்ந்த வைவஸ்த மனு என்ற பாரத நாட்டைச் சேர்ந்த மன்னனின் அவையில் இருந்த வானியல் அறிஞர்கள் 27 நட்சத்திரக் கூட்டங்களையும் 27 மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு நட்சத்திர மண்டலத்தையும் கடக்க சூரியன் எடுத்துக் கொள்ளும் கால அளவையும் துல்லியமாகக் கணக்கிட்டு



சொல்லியிருக்கிறார்கள். இப்படி எவ்வளவோ அரிய பெரிய விஷயங்கள் அடங்கிய சித்தர்கள், மற்றும் ரிஷிகளின் சுவடிகளை நாம் இழந்து விட்டோம். பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்னவர் நிக்கலஸ் கோப்பர் நிக்கஸ் என்பார்கள். ஆனால் 5,000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சூரிய சித்தாந்தத்தில் நம் முன்னோர்கள் இந்தத் தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர எவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறது என்பதையும் வினாடி சுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் பூமி தட்டையானதல்ல உருண்டையானது என்பதை நிரூபிக்க பல எடுத்துக்காட்டுகளையும் கூறியிருக்கிறார்கள். இவ்வளவு கருத்துக்களையும் ஏன் சொல்கிறேன் என்றால், பழைய பஞ்சாங்கம் என்று நீங்கள் கேவலமாகப் பேசுவது ஒன்றும் அவ்வளவு சாதாரண விஷயமல்ல. அது நம் முன்னோர்களின் இந்துக்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், அறிவாற்றல் இவற்றை உலகுக்கு உணர்த்தும் அடையாளமாகும். அது வானவியல் பொக்கிஷமாகும். அதை முறைப்படி கற்றுணர்ந்து பயன்படுத்துபவர்கள் வாழ்வில் மேன்மையடைவது திண்ணம். பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்களைக் கொண்டது. வாரம், திதி, நட்சத்திரம் , யோகம், கரணம் என்பவையே அந்த ஐந்து அங்கங்கள், திதி என்பது ஆகாயத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தைக்குறிப்பதாகும்.யோகம் என்பது ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியனும், சந்திரனும் செல்கின்ற மொத்த தூரமாகும். கரணம் என்பது திதியில் பாதி. வாரம் என்பது கிழமை. நட்சத்திரம் என்பது 27 நட்சத்திரங்களைக் குறிக்கும்.

இவைகளையெல்லாம் கால அளவில் கணிதப்படுத்தி நமக்குத் தெரிவிப்பதே பஞ்சாங்கம். எனவே பஞ்சாங்கம் என்பது ஆகாயத்தில் உள்ள நட்சத்திர மண்டலங்கள் அவற்றில் உள்ள கிரகங்கள் ஆகியவற்றின் நிலைகளை நமக்கு உணர்த்துகிற வழிகாட்டியாகும். சூரியன், சந்திரன் மற்ற கிரகங்களின் காந்த சக்தியின் ஆற்றல் பூமியின் மீதும், அதில் வாழும் உயிரினங்கள் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று இன்று விஞ்ஞானமே ஏற்றுக் கொள்கிறது. இன்ன நாளில் இன்ன நட்சத்திரத்திற்கு வருகிறது. இன்ன நட்சத்திரம், இன்ன கிரகம் பூமியின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது என்பதைத் தெளிவாகத் தெரிவிப்பதே பஞ்சாங்கம் எனவே நீங்கள் கேவலமாகப் பேசுகிற அளவுக்கு அது ஒன்றும் சாதாரணமான விஷயம் இல்லை

---

*இச்சஞ்சிகைக்கான- உங்கள்*
*அனைத்துப் பங்களிப்பும்*
*எங்கள்*
*இந்து தமிழ்ச் சமூகத்தின்*
*மீள் எழுச்சிக்கானது எங்கும்*
*இந்துமணம் பரப்பிட*
*மகிழ்ச்சியுடன் உதவியே*
*இறையருள் பெற்றிடுக*

*நன்றி*
*ஆசிரியர்*

# சைவ சிம்மத்தின் கர்ஜனை




யாழ்ப்பாணத்தில் சைவர்களை அழிக்கத்துடித்த மிலேச்சப் பிசாசுக்கு எதிராக சைவர்களை ஒன்றுதிரட்டி அவர்களின் வீர சேனாதிபதியாய் திகழ்ந்து போர் முழக்கமிட்டு சிவாகமம் எனும் போர்வாளை ஆயுதமாகக் கொண்டு, அந்த மிலேச்சப் பிசாசை புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றி கர்ஜனை செய்த சைவ சிம்மம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.. இவருடைய தொடர் தாக்குதலை சமாளிக்க முடியாத, கிருத்துவப் பாதிரிகள். இவர் முன் நொறுங்கிப் போயினர்... இவர் ஓர் மாமலை என அறியாமல், மோதி பொடிப் பொடியாய் போயினர்... யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல வாசகம் ஒன்றுண்டு, " யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவம் குன்றி சைவம் காப்பாற்றப்பட்டு, சைவப் பிரகாசம் எங்கும் வீசுகிறதென்றால் அது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எனும் மாமனிதரால் தான்"... ஆம் உண்மை. பட்டி

தொட்டியெல்லாம் சிவாகம நெறி வளர்ந்ததென்றால் அது நாவலர் பெருமான் ஒருவரால் தான்... ஸ்ரீலஸ்ரீ என்பது லக்ஷம் திருவாளர்களுக்கு சமம் என்று அர்த்தம்.. அந்தப் பட்டம் ஆதீனத்து ஆச்சாரியர்களுக்கே உரிய பட்டம் ... ஆனால் ஆதீன ஆச்சாரியர் அல்லாத ஒருவருக்கு அப்பட்டம் உண்டென்றால், அது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஒருவரக்கெ அந்த பெருமை உண்டு.... மஹாவித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களுக்கே கிட்டாத ஒரு

பெருமை நாவலர் பிரானுக்கு கிட்டியது...

பொதுவாக ஆதீன ஆச்சாரியர்கள் எவரும் ஒரு வித்வானையோ அல்லது எவராக இருப்பினும், அவரை வழி அனுப்புதல் மரபு அல்ல... ஏனெனில், சைவ சமூகத்தில் ஆச்சாரியர் தான் தலைமை ஸ்தானத்தில் இருப்பவர்... மன்னர் கூட இரண்டாம் ஸ்தானத்தில் தான் இருப்பார்... அப்படிப்பட்ட திருவாவடுதுறை ஆதீன ஆச்சாரியரே, நாவலரை வழி அனுப்பினார் என்றால், நம்ப முடிகிறதா?

அது ஒரு சுவாரஸ்யமான ஓர் சம்பவம். நாவலவர்களிடம் சைவ சாத்திரங்களைப் பற்றி பேசிக்கொண்டு இருந்தார் குருமர் சன்னிதானம்.. நாவலர் அவர்கள் புறப்படும் நேரம் வந்துவிட்டது... அவரை வழியனுப்ப ஆச்சாரியர் அவர்களுக்கு விருப்பம், ஆனால் அது ஆதீன மரபு அல்ல... இருப்பினும் எப்படியாவது அவரை வழயனுப்ப வேண்டுமென்று நினைத்தார். ஆச்சாரியர்... அதனால் ஒரு தந்திரம் செய்தார்... தன்னிடம் உள்ள ஒரு ஏட்டை, நாவலவர்களிடம் கொடுப்பது பொல எழுந்து அவரிடம் சென்று கொடுத்தார்.. சைவ சித்தாந்த சமூகத்தின் ஞான ராஜதானியாக விளங்கும் திருவாவடுதறை ஆதீன பரமாச்சாரியரே, நாவலவர்களை வழியனுப்பினார் என்றால், நாவலரின் பெருமை எவ்வளவு பெரிது...

நாவலருக்கு கிடைத்த இன்னுமொரு சிறப்பு வேறு எவருக்கும் கிடைக்காத சிறப்பு... அது தான் திருவண்ணாமலை ஆதீன ஆச்சாரியர், நாவலருக்கென்றே தனி ஒரு சிவிகை (பல்லக்கு) செய்ய கட்டளையிட்டு, நாவலவர்களை பட்டன பிரவேசம் செய்ய வைத்தார்...

நாவலர் பட்டத்தை ஆறுமுக நாவலர் பெற்ற விதமும் நம்மை பிரமிக்க வைக்கிறது தமிழ் நாட்டில் அன்று தான் முதல் முறையாக சென்றார்... திருவாவடுதுறைக்கு செல்கிறார். அவ்வாதீன ஆச்சாரியர், நாவலரை சைவ சமய பிரசங்கம் செய்யுமாறு கட்டளையிடுகிறார்... அது தான் தமிழ் நாட்டில் இவர் செய்த முதல் பிரசங்கம்.. அதற்கு முன் அவர் இங்கு பிரசங்கம் செய்ததே இல்லை.. சைவ நூல்களின் சாரமாக ஓர் பிரசங்கத்தை பொழிந்தார் நாவலர்... அவரின் சைவ நூல் அறிவையும் நாவன்மையையும் கண்டு சந்தோஷமடைந்த ஆச்சாரியர், " நாவலர்" என்று அக்கணமே பட்டம் சூட்டினார். அன்றிலிருந்து இன்று வரை நாவலர் என்றால், அது ஸ்ரீல- ஆறுமுக நாவலரையே குறிக்கும் சொல்லாகிவிட்டது..

கிறிஸ்தவ சமயத்தை எதிர்த்து, பல கிறிஸ்தவ கண்டன நூல்களை இயற்றி, பாதிரிகளே தம்மை பாராட்டி எழுத வைத்து அவர்களின் தோல்வியை ஒப்புக்கொள்ள வைத்து வெற்றி வாகை சூடிய ஓரே மாமனிதர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஒருவரே... வேறு எந்த சமயத்துக்கும் கிடைக்காத வெற்றியை சைவத்துக்கு தந்தவர் நாவலர் பிரான்... சிவாகம நெறியின் காவலர், நாவலர் அவர்கள்... அதனால் தான் இவரை ஆங்கிலத்தில் "Champion of the Agamic path" என்றழைப்பர். வாழ்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் புகழ் வளர்க அவர் காட்டிய சிவாகம நெறி.

# இந்துக்குடும்ப வாழ்க்கை நெறிமுறைகள்

குடும்பம் என்பது நான்கு சுவற்றிற்குள் நான்கு பேர் வாழ்வது மட்டுமல்ல, அப்படியாயின் அது என்ன? இந்தக் கேள்விக்கான பதிலாக குடும்பம் என்ற ஆலமரத்தின் ஆணிவேர்களையும் விழுதுகளையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தவே இந்தத் தொடர்

குடும்பம் என்பது

ஓர் ஓவியன் உலகிலேயே தலை சிறந்த ஓர் ஓவியம் வரைய விரும்பினான். காலம் தான் கடந்தது. ஆனால் அதற்கான காட்சி அவனுக்கு எங்கும் கிடைக்கவில்லை. ஒரு நாள் தன் வீட்டில் இருந்த அம்மா, அப்பா, மனைவி, குழந்தைகளை விட்டு விட்டு நல்லதொரு காட்சியைத் தேடி காட்டிற்குப் புறப்பட்டான். நாட்கள் நகர்ந்தன பசியால் நடைதளர்ந்து வயிறு கிள்ளியது கண்கள் செருகியது மனம் குடும்பத்தை நினைத்து, நினைத்தவுடன் குழந்தையின் மழலை காதில் கேட்டது. மனைவியின் கவலை தெரிந்தது. அப்பாவின் தவிப்பும் அம்மாவின் துடிப்பும் அத்தனையும் மனதில் வந்தது. அடுத்த நிமிடம் ஓவியனின் கண்கள் பளிச்சிட்டன. கால்களுக்கு சக்தி பிறந்தது. வீட்டை நோக்கி ஓடத்தொடங்கினான். வீட்டு வாசலில் நிற்க அப்பா என கதறிக் கொண்டே குழந்தை ஓடி வந்தது காலைக் கட்டிக் கொள்ள மனைவியின் முகம் மலர அம்மாவும், அப்பாவும் ஆனந்தக் கண்ணீர் வடிக்க இந்தக் காட்சிகளைக் கண்ட ஓவியன் சிந்தித்தான். நல்ல காட்சி என் குடும்பத்திலேயே இருக்கும் பொழுது எங்கெல்லாமோ அலைந்தேனே? என்ன முட்டாள்த்தனம் என ஓவியன் தெளிவு பெற்றான். இப்படிப்பட்ட அன்பு பாசம், பரிவு, காதல், நிறைந்தது தான் எமது இந்துக் குடும்பம் ஆனால் மேலை நாடுகளில்.......

இங்கிலாந்திலே எம்மவர்களால் நடத்தப்பட்ட ஒரு பொங்கல் விழாவில் அன்றைய பிரதமர் மார்க்ரெட் தாட்சர். இந்துக் கூட்டுக்குடும்பத்தின் மேன்மையையும் குடும்ப வாழ்வில் உள்ள நல்ல பண்புகளையும் மனதாரப் புகழ்ந்தார்.

அதே சமயம் மனமுறிவால், விவாகரத்துக்களால் இங்கிலாந்தில் சமுதாய வாழ்க்கை என்னவெல்லாம் சாவால்களை சந்திக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்ட அவர் பிரித்தானிய சமுதாயத்திற்கு குடும்பப் பண்பை இந்துக்கள்தான் போதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இங்கிலாந்தில் நிலமை இப்படி இருக்க.

இந்துக்களிடத்தே இன்று குடும்ப பண்புகள் நசிந்து வருவதால் ஏராளமான பிரச்சினைகள் தலை தூக்குகின்றன. கடந்த காலங்களில் எமது பிரதேசதங்களில் முதியோர் இல்லங்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் முதியோர் இல்லங்கள் வந்தாயிற்று. இத்தனை காலமும் இந்த முதியோர்கள் எல்லோரும் வாழ்வின் அந்திம காலத்தை அவரவர் குடும்பங்களிலேயே செல விட்டார்கள். ஆனால் இப்போது இவர்கள் தங்கள் குடும்பங்களில் நீடிப்பது கடினமாகிவிட்டது. கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக இந்துக்களின் குடும்ப அமைப்பு கிளை அறுபடாமல் தொடர்ந்து நீடித்து வந்துள்ளது. முதியவர்கள் தங்கள் குடும்பங்களிலிருந்து வெளியேறி முதியோர் இல்லங்களை தஞ்சம்அடைய வேண்டி இருந்ததில்லை.

முதியோர் இல்லம் என்ற ஏற்பாடே இந்துக்களுக்குரியதல்ல. இது எம் பாராம்பரியத்திலும் இருந்ததல்ல. அதனை நாம் மேற்கிலிருந்துதான் இறக்குமதி செய்துள்ளளோம். கடந்த பல நூற்றாண்டுண்டுகளாக நாம் ஆற்றிய

ஆக்கிரமிப்பு உள்ளாகியே வந்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக போர்த்துக்கீயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் காலம் தொட்டு கடந்த 3 தசாப்தகால யுத்தமும் தான் எம்மை அதிகம் பாதிப்புக்கு உள்ளாக்கியது. இன்று மணமுறிவும் விவாகரத்தவும் வேகமாக அதிகரித்து வருகிறது. குடும்பத்தாரிடையே சுயநலம் காரணமாக உரிமைச் சண்டைகள் வலுத்து வருகிறது. ராமனும், பரதனுமாக இந்து மக்களிடையே இருந்த சகோதர பாசம் வேகமாக குறைந்தே வருகிறது. அன்பும், நல்லெண்ணமும் அடிபட்டு, பொறாமையும் வஞ்சனையும் தலைதூக்குகின்றன. மேற்கில் கலாசாரம் உலகாயுதத்துக்கு முக்கியத்தும் அளித்து தனிநபரை மையமிட்டது. அந்த கலாசாரத்தின் தாக்கத்தால் இந்துக்களின் உறவுகளில் மாற்றம் ஏற்பட்டு குடும்பச்சுழல் பாதிக்கப்பட்டு வருகிறது இந்து குடும்பம் எப்படி இருந்தது மேற்கின் பாதிப்பால் எப்படி மாறிவருகிறது என்பதை ஆராய்வோம்.

### குடும்பம் குறுகிய வட்டமல்ல

சில தாசாப்தங்களுக்கு முன்புவரை கிராம வாசியோ, நகரவாசியோ, படித்தவரோ, படிக்காதவரோ யாராக இருந்தாலும் சரி குடும்பம் என்றால் தாய் வழி தாத்தா - பாட்டி, தந்தை வழி தாத்தா - பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா - சித்தி, அண்ணன் - அண்ணி, மகள் - மருமகன், அத்தான் - அம்மான், சேய் என்று எல்லாவிதமான உறவுகளும் கொண்டதாக இருந்தது. இவ்வளவு பெரிய குடும்பத்தைக் கொண்டிருந்த இந்துக்களின் சமுதாய வாழ்க்கை பல்லாயிரம் ஆண்டுகளாக இடையறாமல் நடைபெற்று வந்தது. இவ்வளவு பெரிய குடும்பத்தை தலைமுறை தலைமுறையாக நெடுங்காலம் கட்டிக் காப்பாற்றி வர போதிய வளமும் செல்வமும் இருந்தது வந்தது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். குடும்பத்தில் சுபிட்சம் நிலவியது சுகம் நிறைந்திருந்தது. அனைவருக்கும் மனத்தில் திருப்தி இருந்தது. வீட்டில் அமைதி நிலவியது.

ஆனால் தற்பொழுது குடும்பம் என்ற சொல்லைக் கேட்ட உடனேயே கணவன், மனைவி, ஒருமகன், ஒரு மகள் என்ற நிழல்படமே கண்முன் விழுகிறது. நாமிருவர் நமக்கிருவர் என்னும் போக்கும் இன்றைய பொருளாதாரச் சிக்கல்களும் கல்வியறிவும், நாகரீகம் எனும் மாயையும் சேர்ந்து இந்நிலையை உருவாக்கியுள்ளன.

### சிறிய குடும்பம் சிங்காரத் தோட்டமா?

இன்று சிறிய குடும்பங்களாக இருப்பது அனைத்திற்குமே வசதியாக உள்ளதாகவும், அதுவே சிறந்த நாகரீகம் எனும் மனப்பாங்கும் இந்துக்களிடையே மிகப் பிரபல்யமாகி வருவதை காணலாம். பணம் எனும் செல்வச் செழிப்பை வைத்துத்தான் இங்கு இவ்வாறான எண்ணப்பாடுகளை தோற்றியுள்ளன என்பது இலகுவாக புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. குடும்பம் சிறியதாக இருந்தால் குடும்பத்தை ஊட்டி வளர்க்கும் செலவும் குறைவாக இருக்கும். அதனால் குடும்பம் செழிப்பாக இருக்கும் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் அது உண்மையா? அமெரிக்காவில் எவ்வளவு செழிப்பு இருந்தும் மனிதனுக்கு மனத்திருப்தியும் அமைதியும் கிடைப்பதில்லையே ஏன்?

அடுத்த இதழில் பார்ப்போம்..........

இந்து சமய செய்திகளை
இலவசமாக உங்கள்
கைத்தொலைபேசியில்
பெற்றுக்கொள்ள F என ரைப்
செய்து இடைவெளி விட்டு
HSSSL என ரைப் பண்ணி
40404 இற்கு send
பண்ணவேண்டும்

## சம்பாதியும் ஜடாயுவும்

ஒரு கழுகின் இரண்டு இராட்சத அளவிலான முட்டைகள் பொரிக்கத் தொடங்கின. இரண்டு குஞ்சுகள் உலகினுள் இருண்ட உலகிலிருந்து புதிய ஒளிமயமான உலகினுள் பிரவேசித்தன. தம் மாபெரும் இறக்கைகளை பெருமிதத்துடன் விரித்தன. விரைவில் இரண்டு குஞ்சுகளும் மாபெரும் இறக்கைகளும் உறுதியான அலகும், கூர்மையான கண்களும் கொண்ட பறவைகளாக வளர்ந்து விட்டன.

மூத்தவன் சம்பாதி தற்பெருமை நிறைந் தனவாக வளர்ந்தான். தன் இறக்கைளின் வலிமையாலும் தனது ஆற்றலினாலும் வீண் விளையாட்டிலும் பொழுது போக்கிலும் நேரத்தைச் செலவழித்து வந்தான்.

ஒரு நாள், காலையில் உதிக்கும் சூரியனைப் பார்த்தான் சமபாதி. பொன்னிறப் பந்தாக தோன்றிய சூரியனைப் பிடித்து விளையாட எண்ணினான். சம்பாதி தன் தம்பி ஜடாயுவை தன்னுடன் வரச்சொன்னான். வேண்டாம் அண்ணா, வீண் விளையாட்டு வேண்டாம். வெற்று முயற்சியில் நம் சக்தியையும், நேரத்தையும் வீணாக விரயம் செய்ய வேண்டாம், என்றான் ஜடாயு. அண்ணனோ தன் தம்பியைக் கட்டாயப் படுத்தினான்.

அண்ணன் சொல்லைத் தட்டாத தம்பி ஜடாயு அண்ணனுடன் சேர்ந்து வானில் பறந்தான். இருவரும் உயரே உயரே பறந்தனர். பகல் வளர வளர சூரியன் உதிக்கத் தொடங்கினான். இம் முயற்சி தேவையற்றது என்று அண்ணனுக்கு புரிய வைக்க மீண்டும் மீண்டும் முயன்றான் ஜடாயு. இதனால் எரிச்சலுற்ற சம்பாதி தம்பியைத் திரும்பிக் போய்விடுமாறு கூறினான். அண்ணனின் சொல்லைத் தட்டாத ஜடாயு திரும்பினான்.

ஜடாயு ஒரு மரத்தின் மீது ஓய்வாக அமர்ந்திருந்த போது காட்டையே அதிர வைக்கும் ஒலியொன்று கேட்டது. திரும்பி பார்த்தான் ஜடாயுவின் கண்களில் கண்ணீர் பெருகியது அண்ணன் சம்பாதி சூரிய வெப்பத்தில் இரண்டு இறக்கைகளும் எரிக்கப்பட்டு, விழுந்திருந்தான். ஆணவம் கொண்ட சம்பாதி எல்லாம் இழந்திருந்தான். பறவைக்கு அழகு அதன் இறக்கை இறக்கைகள இழந்த சம்பாதி வெளியே முகம் காட்டாது ஒரு குகையினுள் தன் வாழ் நாளைக் கழித்தான்.

பண்பும் பணிவும் நிறைந்தவனாக ஜடாயு வளர்ந்து வந்தான். ஒரு நாள் ஜடாயு ஒரு மலையின் மேல் ஓய்வாக அமர்ந்திருந்த போது "காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்" என்று ஒரு பெண்ணின் குரல் ஒலிக்கக் கேட்டான். சுற்றிலும் பார்த்த ஜடாயு ஒரு விமானத்தில் இருந்து சீதையின் குரல் அது என்று அறிந்த கொண்டான். சீதையை சிறைப்பிடித்து இலங்கைக்கு விமானத்தில் எடுத்துச் சென்று கொண்டிருந்தான் இராவணன்.

இராவணன் பராக்கிரமம் வாய்ந்த போர்வீரன் மிகச்சிறந்த வீரர்களும் அவனை எதிர்த்து நிற்கத் தயங்கினர். ஜடாயுவோ ஒரு பறவை; இராவணனை எதிர்த்தால் ஒரு நிமிடங்கள் கூட தாங்கமாட்டான். ஆனால் சிந்திப்பதற்கு எங்கே நேரம்? கண்ணெதிரே ஒரு அநியாயம் நடப்தை பார்த்து விட்டு சும்மா இருக்க முடியுமா? செயல்பட வேண்டிய நேரமல்லவா இது?

ஜடாயு செயலில் இறங்கினான். தனது இரண்டு இறக்கைகளையும் விரித்து இராணவனுடைய வழியை மறித்தான். என்னைத் தாண்டிச் செல்ல முடியாதடா என்று இராவணனிடம் சொல்கிறாற் போன்றதொரு உறுதியை ஜடாயுவின் கூர்மையான கண்களும் விறைத்து நின்ற இறக்கைகளும் வெளிப்படுத்தின. இராவணன் முதலில் ஜடாயுவை ஒரு அற்பப் பறவை என்று அலட்சியப்படுத்தினான். பின்னர் தன்னை ஜடாயுவால் தடுக்க முடியாது. அவனது எதிர்ப்பு பயனற்றுப் போகும் என்று

ஜடாயுவிற்குப் புரிய வைக்க முயன்றான். இறுதியில் கொன்று விடுவேன் என்று மிரட்டினான். ஜடாயு உறுதியாக நின்றார் தன் முன் தெரிந்திடும் மரணம் கூட அவரது உறுதியை குலைப்பதில் தோல்வியுற்றது.

யுத்தம் தொடங்கியது போர்க்கலைகளில் விற்பன்னராக இராணவன் ஒருபக்கம் ஏதும் அறியாத பறவை மறுபக்கம், வாளும் கேடயமும் ஏந்திய இராவணன் ஒரு பக்கம் தன் அலகையும் இறக்கைகளையும் மட்டும் ஆயுதாமாகக் கொண்ட பறவை மறுபக்கம் ஆம் இருவரும் சமமில்லைத்தான் சுயநலம் ஒருபக்கம் தொண்டு மறுபக்கம் சுகபோகம் ஒருபக்கம் தியாகம் மறுபக்கம் அதர்மம் ஒரு பக்கம் தர்மம் மறுபக்கம்.

உலகமே தன்னைக் கண்டு நடுங்கும் போது கேவலம் ஒரு பறவை தன்னை எதிர்த்து நிற்கத் துணிந்ததால் இராவணன் பெரும் ஆத்திரம் கொண்டான். வாளெடுத்து ஜடாயுவின் இறக்கையை துண்டித்தான். ஒரே இறக்கையுடன் எதிர்ப்பை தொடர்ந்தார் ஜடாயு அந்த இறக்கையையும் துண்டித்த இராவணன் ஜடாயுவை இரத்த வெள்ளத்தில் விட்டு விட்டு விமானம் எடுத்து பறந்து விட்டான்.

பறவைக்கு பெருமையே அதன் இறக்கைதான் இறக்கைகளை இழந்திருந்தார் ஜடாயு. ஆனால் அதற்காக அவர் வருந்தவில்லை. அநியாத்தை தடுக்க தன்னால் இயலவில்லையே என்ற வருத்தம் தான் அவருக்கு. சீதையை இரவணன் எடுத்துச் சென்ற செய்தியை ஸ்ரீராமனிடம் சொல்வதற்காக தனது உயிரை பிடித்து வைத்திருந்தார் ஜடாயு. ராமனிடம் நடந்த விடயத்தை சொன்ன பிறகு ராமனுடைய மடியில் உயிர் நீத்தார். பிறந்த அனைவரும் இறப்பர். எத்தனை நாட்கள் வாழ்கிறோம். என்பதல்ல எதற்காக வாழ்கிறோம். என்பதே முக்கியம். அண்ணன் தம்பி இருவரும் ஒரே மாதிரி இறக்கை துண்டிக்கப்பட்டு இறந்தனர். அண்ணனின் இறக்கைகள் துண்டிக்கப்பட்து ஆணவத்தால். அகங்காரத்தால் தம்பியின் இறக்கைகள் துண்டிக்கப்பட்டது தர்ம காரியத்தில் நீதியை நிலைநாட்ட இன்றும் ராமர் கோயில்களில் ஜடாயுவும் வணங்கப்படுகிறார்.

பிறருக்காக வாழ்பவனே வாழ்கிறான்
மற்ற அனைவரும் பிணங்களே

சம்பாதியும் சுயநலம் துறந்த நற்காரியங்களில் ஈடுபடும் போது அவரது இறக்கைகள் முளைத்து அவருக்கு மேல் உலகப் பதவி கிடைத்து?

இன்று கின்னஸ் சாதனைக்கு என கண்ணாடியைத் தின்கிறேன, மீசையால் வண்டியை பிடித்து இழுக்கிறேன் என்று முயற்சி செய்யும் சம்பாதிகள் பலர் உள்ளனர். அதேபோல் தர்மம் நிலைக்கவும் தன் இனம் வாழவும் தனது திறமையை அறிவை, உடல் வலிமையை, நேரத்தை பணத்தை சமரப்பித்திடும் ஜடாவும் பலர் உள்ளனர். பத்திரிகைகளிலும் TV chanel களிலும் சம்பாதிகளுக்கே விளம்பரம் அதிகம் இருந்தாலும் அமைதியாக தம் பணியை செய்து வருகின்றனர் ஜடாயுக்கள்

உயிர் நீத்த ஜடாயுவின் உடலை தீயிலிட்டு மகன் தந்தைக்கு செய்து போல் ஈமச்சடங்குகள் செய்தார் இராமர். ஜடாயு வைகுண்டம் ஏகினார்.

# தக்க வயதில் திருமணம்

இன்று இந்துக்களிடையே தக்க வயதில் திருமணம் என்பது தள்ளிப் போவதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பிரச்சினையாக உருவெடுத்துள்ள போதும் பெண்களையே அதிகம் பாதிக்கின்றது. பெண்களைப் பொறுத்த வரை கல்விக் கடன் அடைப்பு, பெற்றோரின் பராமரிப்பு, உடன் பிறப்புக்கு உறுதுணை, ஒப்பனை, அடிக்கடி சிற்றுண்டி உபசாரம், தோழமைக்கு உபசரிப்பு உல்லாசப்பயணங்கள், அலங்கார ஆடம்பரநகை, நடை, உடை இவற்றால் சேமிக்க முடியாததாலும், பெற்றோர்களால் திருமணசுமைக்கு தோள்தர இயலாமையினாலும், கல்யாண முருங்கைகளாக கன்னியர் கூட்டம் கூடி வருகிறது.

கல்யாணகார்களால் ஒரு சிறிய அளவு பற்றாக்குறை, பள்ளத்தாக்கு இடை வெளிபோல் படம் பிடித்துக்காட்டப்பட்டு, திருமணங்கள் திசை திருப்பப்படுகின்றன. மிக எளிய ஒரு வேளை திருமணம், சம பாதி திருமண செலவுகள் பகிர்தல், பகட்டு ஏதுமற்ற அழைப்புகள், பட்டுகளின் வெட்டு கூட்டம் குறைந்து திருமணம் நிகழ்வுற சமுதாயமாற்றம் தேவை.

ஏழடிவைத்து கைப்பிடிப்பவர்களுக்கு எழுதபடிகள் உயர, எளிமையே வாழ்க்கையை சாஸ்வதமாக்கித்தரும் முதலடி

தக்க வயது திருமணம் அதை தக்க வைக்க உதவுவதோடு, சந்ததி தழைக்கவும், அவர்கட்கு காலா காலத்தில் சந்நிதி திறக்கவும் வகை கோலும் அல்லவா! தக்க வயது திருமணம் என்பது ஒரு சமுகத்தின் இருப்பிற்கு மிகவும் அவசியமானது. அதுவும் போர் ஓய்ந்த தேசத்தில் இழப்பையே இருப்பாக்கிக் கொண்ட இந்துக்களுக்கு இன்றைய காலத்தின் தேவையும் கூட, எனவே அன்பான இந்து உள்ளங்களே உணர்வீர்களா?

---

*அடுத்த இதழில் எதிர்பாருங்கள்*

1. *இனவழிப்புச் சாதனையாளனை கொண்டாடும் அமெரிக்கா.*
2. *உலகம் வியக்கும் தமிழனின் கட்டடக் கலைக்கு கட்டியம் கூறும் "அங்கோர்வாட்"*
3. *கண்ணதாசனின் மாற்றம் தந்த தலை சிறந்த நூல்.*
4. *சோதிடம் கற்போமா?.*

*இன்னும் பல ஆக்கங்கள் தாங்கி அடுத்த மாத இதழ்.*
*பிரதிகளுக்கு முந்துங்கள்.*

# பஞ்சாமிர்தத்தில் பஞ்ச(மே)ஏன்?

தமிழர் வழிபாட்டு முறைகளில் கோயில் வழிபாடு சிறப்புப் பெற்றது. இறை உருவங்களை பிரதிட்டை செய்து நாயாந்தம் வழிபடும் முறையில் "அபிடேகம்" முதன்மையானது. அபிடேகத்திரவியங்களில் வரையறை செய்யப்பட்ட பொருட்களும் உள. அவை பல நூல்களில் குறிப்பிடப்பட்டு ள்ளன. மரபான வழிபாடு நடைபெற்ற போது இவைபற்றிய கருத்து வேறுபாடு களுக்கு இடமேற்படவில்லை. ஆனால் இன்று புலம் பெயர் வாழ்வியலும் பிற பண்பாட்டின் செல்வாக்கும் சில கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளன. அபிடேகத்திரவி யங்களில் ஒன்றான பஞ்சாமிர்தம் பற்றி சில கருத்து வேறுபாடுகள் உள.

இறைவனுக்குரிய அபிடேகத் திரவியமாக பஞ்சாமிர்தத்தை இன்று யாவரும் ஏற்றுள்ளனர். ஆனால் அதை தயாரிக்கும் நிலையில் முரண்பாடு ஏற்பட்டு உள்ளது. ஐந்து பொருட்களின் இணைவே பஞ்சாமிர்தமாகும். பஞ்ச என்ற வடசொல் இதனைத் தெளிவாய் உணர்த்துகின்றது. இன்று அந்த ஐந்துக்கு மேற்பட்ட பொருட்களால் பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படுகிறது. ஐந்து பொருட்களால் தான் தயாரிக்கப்பட வேண்டுமென்ற உணர்வுடனிருப்பவர்களும் வெவ்வேறு பொருட்களை பயன்படுத்துவதைக் காண முடிகின்றது. சிலர் ஐந்து பழங்களின் கலவையே பஞ்சாமிர்தமென்பர் வேறு சிலர் மா, பலா, வாழை என்ற முக்கனிகளுடன் தேனும் நெய்யும் கலந்து தயாரிப்பதே பஞ்சாமிர்தமென்பர்.

கிரியை பற்றி விளக்கம் தருபவரும் மா, பலா, வாழை, மாதுளை, தேங்காய்த் துருவல் என்பன சேர்ப்பதே பஞ்சாமிர்தம் என விளக்கம் தருகின்றனர் இங்கு பழங்களோடு தேங்காயும் இணைக்கப்பட்டுள்ளது. இந்து சமய சொல்லகராதி (கோக்கலை ஜே.ராஜன் 1992 இல்) "பஞ்சாமுதம்" எனச் சொல்லை குறிப்பிட்டு வருமாறு விளக்கம் தருகின்றார்.


பஞ்சாமுதம் - பஞ்சாமிர்தம்

தேவர்களுக்குப் படைக்கப்படும் உணவு சர்க்கரை, தேன், நெய், பால், வாழைப்பழம், திராட்சை இவை கலந்து தயாரிக்கப்படுவது. இது இறைவனுக்கு அபிஷேகத்துக்குப் பயன்படுகின்றது. எனவே தற்காலத்தில் "பஞ்சாமிர்தம்" பற்றிய ஆய்வு தோன்றியதற்கு இத்தகைய வேறுபட்ட கருத்துக்களெ காரணமாகும். வழிபாட்டு மரபுகள் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது. அதனால் பஞ்சாமிர்தம் பற்றிய தெளிவான விளக்கங்கள் தேவைப்படுகின்றது. முக்கனிகளான மா, பலா, வாழை மூன்றும் அந்த ஐந்து பொருட்களில் சேருவதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஏனைய இரண்டும் தேனும் நெய்யுமாக அமைவதே சாலப் பொருந்தும் தேனும் நெய்யும் மனித உடலுக்கு மிகவும் நன்மையானவை. நெய், தேன் பல நோய்களுக்கு அருமருந்தாகப் பயன்படுகின்றது. "நெய்யரிக்கி உண்பவர்தம் பேருரைக்கில் போமேபிணி" என்று பழையபாடற் பதிவொன்று அதன் சிறப்பை சொல்கிறது. எனவே நம் நாட்டின் மரபான பழங்களான மா, பலா, வாழையுடன் தேனும் நெய்யும் சேர்ந்தகலவையே நீண்ட ஆயுளைத் தரும் பஞ்ச அமிர்தமாகும். இதுவே இறைவனின் அபிடேகப் பொருளாகப்பயன்படுத்தப்பட்டது என்பதே முடிவாகும்.

# கொஞ்சம் பாசம் கொஞ்சம் நேசம்

ஒருவர் விடுமுறை நாள் புதிய கார் வாங்கி அதை துணி, தண்ணீரால் சுத்தம் சொய்துகொண்டிருக்கிறார்... ". பார்த்து மெல்ல காருக்கு வலிக்கப்போகுது"..

அவரோட குழந்தை "சின்ன பையன்.... சரியான சுட்டி... 4 வயது இருக்கும் கையிலே அவன் ஏதோ ஆணி வைத்திருப்பான் போலே.. காரு புதியது அல்லவா! சின்னப் பிள்ளைக்கு என்ன தெரியும்?



அவன் ஆணியை வைத்து காரிலே ஏதோ கிறுக்கிக் கொண்டு இருந்தான் ...

திடீரென்று பார்த்தாரே அந்த மனிதன், கையிலே கிடைத்ததை எடுத்து ஓங்கி ஓரே போடு.. கையிலே பட்டு ஒரு விரல் துண்டாப்போய் இரத்தம் தர..தர.. என பாய்ந்தது பையனுக்கு ஒன்றும் புரியவில்லை. நடுங்கிறான் ஆ..ஊ.. என அலறுகிறான்.

அடித்த ஆள் அடித்துப்பிடித்து வைத்தியசாலைக்கு கூட்டிக்கொண்டு போகிறார்.. வைத்தியர் மருந்து எல்லாம் போட்டு, விரலை ஒட்டவைத்து பையனை குணப்படுத்துகிறார். ஒரு நாள் வைத்தியசாலையில் ஒய்வு எடுக்கட்டும் நாளை வீட்டுக்கு போகலாம் என்று சொல்கிறார்.

நம்ம ஆள் பாவம்.. அந்த பையனை விட அவருக்குத் தான் கண்ணீர் அதிகம் வருகிறது...

" வலிக்குதா கண்ணு..? அப்பாவை மன்னித்துவிடடா... நீ கொஞ்சநேரம் தூங்கு.. அப்பா போய் உனக்கு மருந்து வாங்கிட்டு வந்துவிடுகிறேன்.. பின்னேரம் நாம் வீட்டுக்கு போவோம்.. என்ன? பையன் வலி மாத்திரை சக்தில அப்படியே அசந்து தூங்குகிறான்.. நம்ம ஆள் சோகமா... நொந்து நூலாகி வெளியே வாறார்.... ச்சே.. என்ன மடத்தனம் பண்ணிட்டேன்.. ஆத்திரம் என்னோட கண்ணை எப்படி மறைத்திருக்கிறது.. நல்ல வேளை ...


இதோட போய்விட்டது... பிஞ்சுக் குழந்தை என்ன நினைத்திருப்பான் என்னைப் பற்றி?.. எங்கையாவது எசகு பிசகாக முகத்திலே அல்லது கண்ணிலே பட்டு இருந்தா...?
ச்சே.... நான்எல்லாம் ஒரு மனிதனே இல்லை......
நடந்துகொண்டே கார் பார்க் பண்ணிய இடத்துக்கு வாறார்..... அப்பத்தான் காரிலே அவர் பையன் கிறுக்கினதை பார்க்கிறார்.. என்ன தெரியுமா எழுதி (கிறுக்கி) இருக்கு?
" அன்புள்ள அப்பா"

எப்படி இருக்கும் அவருக்கு?

காதலுக்கு மட்டும் இல்லை... பாசத்துக்கும், கோபத்துக்கும் கூட கண்ணில்லை..
கோபம் வரும்போது. நமது உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது முக்கியம். அப்படி செய்தால் நம்மை மிஞ்ச யாருமே இல்லை..... நீங்கள் ரொம்ப நேசிக்கிறவர்களிடம் தான் கோபம் ரொம்ப வரும்.. கோபத்தை குறைத்தால், அதற்குப்பிறகு வாழ்க்கையே வசந்தமாகும்.

## யோகக் கலை

# மூச்சுப் பயிற்சி



மூச்சுப்பயிற்சி என்றாலே அது ஒரு சிக்கலான விஷயம் என்பதுபோல நினைக்க வேண்டியதாக இருக்கிறது.
காரணம் அது சம்பந்தமாக விதிக்கப்படும் அல்லது சொல்லப்படும் பயிற்சி முறைகளே!
எதற்காக மூச்சுப்பயிற்சி செய்கிறோம்? சுவாசத்தை சிரமமில்லாமல் எளிதாக்குவதற்கு.. எதற்காக சுவாசத்தை எளிதாக்கவேண்டும்? அப்போதுதான் நிறையக் காற்றை உள்ளிளுக்கவும் வெளிவிடவும் முடியும் எதற்காக நிறையக்காற்றை உள்ளிளுக்கவும் வெளிவிடவும் வேண்டும்?
அப்போதுதான் உள்ளிழுக்கப்படும் காற்றில் பிராணவாயு கூடுதலாக இருக்கும்.
எதற்காகப் பிராணவாயு கூடுதலாக இருக்கவேண்டும்? அப்போதுதான் இதயத்திலிருந்து சுத்திகரிப்புக்காக நுரையீரலுக்கு வரும் இரத்தம் உடனுக்குடன் பிராணவாயு மூலம் சுத்திகரிப்பு

செய்யப்பட்டு தடையில்லாமல் மீண்டும் இதயத்துக்கும் அதைத் தொடர்ந்து உடல் முழுவதும் வேகமாக எடுத்துச் செல்லப்படும். அப்படி வேகமாக எடுத்துச் செல்லாவிட்டால் என்ன ஆகும்? அதற்காகக் காத்திருக்கும் உடல் கட்டமைப்புகளில் இருக்கும் உடற்கூறுகள் தங்களின் இயக்கத்துக்குத் தேவையான சுத்த இரத்தம் உடன் கிடைக்காத நிலையில் திணறவேண்டி வரும்.

அது சரிப்படுமா? சாதாரணமாகவே திணறல் ஏற்பட்டால் கடுமையாக உழைக்கும்போது, விளையாடும்போது, ஓடும்போது, படி ஏறும்போதெல்லாம் அதிகசக்தி தேவைப்படுவதால் அதிக இரத்த ஓட்டம் தேவைப்படுமே அதற்கு என்ன செய்வது? அதற்குத்தான் பயிற்சியின் மூலம் நிறையக் காற்றை உள்ளிழுக்கவும் அதை நுரையீரலில் வைத்துசுத்திகரித்து உடனுக்குடன் தேவைக்குப் பற்றாக்குறை ஏற்படாமல் அனுப்பப்பயிற்சி மேற்கொள்வது. அந்தப்பயிற்சியின்போது என்ன ஆகிறது? சாதாரணமாக அதிகப்படியான வேலையோ விளையாட்டு உடற்பயிற்சி போன்ற பழக்கமோ இல்லாதவர்களுக்கு நிறைய பிராணவாயு தேவைப்படாததால் காற்றிலிருந்து பிராணவாயுவைப் பிரித்தெடுக்கும் பணி நுரையீரலில் அதிகமாக நடக்காததால் அந்தப்பணி

நடப்பதற்கான நுண்ணறைகள் குறைவான அளவே இயங்கு நிலையில் இருக்கும். மற்றவை எல்லாம் சுருங்கியோ அல்லது வேறு சிலவற்றால் அடைபட்டோ இருக்கும். அந்த நிலையில் வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலை செய்தாலோ மாடிப்படிகள் ஏறினாலோ கொஞ்ச தூரம் ஓட முயன்றாலோ வேகமாக நடந்தால்கூடவியர்த்து விறுவிறுத்து மூச்சிரைக்க ஆரம்பித்துவிடும். காரணம் அந்த கூடுதல் வேலைக்குத் தேவையான அளவு கூடுதல் இரத்த சுத்திகரிப்புப் பணி நுரையீரலில் நடக்க முடியவில்லை என்பதுதான் காரணம். இப்போது ஏன் மூச்சுப்பயிற்சி அவசியம் என்பதை அறிந்து கொண்டோமல்லவா?

அதை எப்படிச் செய்வது?

இந்த இடத்தில் ஒரு சிக்கல் உள்ளது. அதாவது இந்தத் துறையில் உள்ள யாராவது ஒருவரைக் கேட்டால் அவர் சொல்வதைப் பின்பற்றுவது அப்போதைக்கு எளிதாகத் தெரியும். ஆனால் பின்னால் அதைப் பெரும்பாலானோர் செய்யமாட்டோம்.

காரணம் மூச்சுப்பயிற்சிக்கென்றே சொல்லப்பட்டிருக்கும் சில பல முறைகளைச் சொல்வார்.

நிச்சயம் பிராணாயாமத்தைச் சொல்வார். பிராணாயாமம் என்பது யோகாசனம் கற்றுக்கொள்பவர்கள் அதன் எட்டுப்படிகளில் நான்காவது படியாக பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி வருகிறது அதை அவர்கள் முழுமையாகப் பயின்றால்தான் அமுத்தடுத்த படிகள் வழியாக சமாதி நிலை என்னும் உச்ச நிலைக்குச் செல்ல முடியும்.

அதற்காக மூச்சை எப்படி இழுக்க வேண்டும், எப்படி விடவேண்டும், இரண்டு நாசிகளையும் மாற்றி மாற்றி எப்படிச் செய்யவேண்டும் உள்ளிழுப்பது, உள்ளே அடக்கி நிறுத்துவது, வெளியே விடுவது, வெளியில் நிறுத்துவது இப்படிப்பட்டநிலைகளை எப்படிக் கையாள்வது, ஒவ்வொன்றுக்கும் எத்தனை வினாடிகள் எடுத்துக் கொள்வது, அந்த நேரத்தைப் படிப்படியாக எந்த அளவு உயர்த்துவது போன்ற பலவிதமான முறைகளில் பயிற்சியைப் பெற வேண்டும். இதுவெல்லாம் சாதாரண வாழ்க்கை வாழ்பவருக்கு நடைமுறை சாத்தியமானது அல்ல. நிறையப் பேரைப்பார்க்கலாம்.

ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்து மூச்சுப்பயிற்சிக்குப் போவார்கள். போதும் வரை நான் யோகா வகுப்புக்குப் போகிேன் என்ற பெருமையாகச் சொல்வதைத் தவிர அதன்படி நடப்பவர் ஒரு சதவிகிதம் கூடப்பார்க்கமுடியாது. அதனால் என்ன பயன்?

ஆகையால் மூச்சுப்பயிற்சியால் என்ன பயனோ அதனைமட்டும் அடைவதற்காக நாம் சில எளிய முறைகளைக் கையாளலாம். அதாவது கீழே ஒரு விரிப்பின்மேல் சம்மணம் போட்டு அமர்ந்து கொண்டோ அல்லது பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டோ ஓரிரு நிமிடங்கள் ஆசுவாசப்படுத்திக்கொண்டு பயிற்நியைத் துவ்கவேண்டும். உடம்பை வளைக்காமல் நேராக வைத்துக்கொள்ள வேண்டும். உங்களுக்குப் பக்கத்தில் சுவரில் ஒரு கடிகாரம் இருப்பது நல்லது. கீழே தரையில் உட்கார முடியாதவர்கள் நாற்காலியில் கூட நேராக நிமிர்ந்து வசதியாக உட்கார்ந்து கொள்ளலாம்.

அதன் பின் ஒரு பத்துத் தடைவ முடிந்த வரை காற்றை உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடவேண்டும். சுவாசம் சீரானதும் ஒவ்வொரு முறை மூச்சை உள்ளிழுக்கத் தொடங்கும்போதும் சுவர்க்கடிகாரத்தில் ஒலிக்கும் வினாடிமுள் நகரும் சப்தத்தை எண்ணிக்கொள்ளவேண்டும்..

எத்தனை வினாடிகள் உள்ளிழுப்பதற்கு செலவாகிறது என எண்ணிக்கொண்டு உள்ளிழுக்க முடியவில்லை என்றால் உடனே வெளிவிடத் தொடங்க வேண்டும். வெளிவிடும் நேரம் எவ்வளவு என்பதையும் கணக்கீட்டுக் கொண்டு வெளிவிட முடியவில்லை என்றால் உடனே உள்ளிழுக்க வேண்டும்.

உள்ளிழுப்பதைவிட வெளிவிடுவதற்குக் கொஞ்சம் நேரம் கூடவாக இருக்கும். உள்ளிழுக்கும் நேரமும் வெளிவிடும் நேரமும் சேர்ந்துதான் ஒரு மூச்சுக்கான நேரம்.ஒரேமாதிரி நேரக் கணக்கில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மூச்சு விட்ட பின்பு மிகவும் எளிதாக இருந்தால் மூச்சின் நேரத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விநாடிகள் அதிகப்படுத்திக் கொள்ளலாம். அதை ஒரே நாளில் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மெதுவாக எப்போது முடியுமோ அப்போது உயர்த்திக் கொள்ளலாம். மூச்சுத் திணறாத அளவு எந்த அளவு வேண்டுமானாலும் நேரத்தைக் கூட்டிக்கொண்டே கொள்ளலாம்.

இந்தப்பயிற்சின் காரணமாக நுரையீரலின் காற்றை உள்ளிழுக்கும் திறனும் அதன்மூலம் இரத்தத்தைச் சுத்திகரிக்கும் பணிக்காகப் பிராணவாயுவை அளிக்கும் திறனும் அதிகரிக்கின்றது. காரணம் அதுவரை நுரையீரலின் திறக்காத அறைகளெல்லாம் திறக்கிறது. அங்கு இதற்கு முன் நடக்காத வேலைகள் எல்லாம் நடக்கிறது. அவ்வளவே!

இந்தப் பயிற்சிக்கு சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாம் தேவையில்லை. கெட்ட பழக்கங்கள் இல்லாமல் உடலைத் தூய்மையாக வைத்திருக்குமளவு இதன் பயன் கூடுதலாக இருக்கும்.

இந்தப் பயிற்சியினால் இதயத்துக்கும் ஓரளவு பயிற்சி கிடைக்கும் இரண்டுக்குமான பயிற்சியை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

## வீரத் துறவி விவேகானந்தரின் சிக்காக்கோ உரைக்கான வரலாற்றுப் பின்னணி!

1,800 வாக்கில் அமெரிக்காவில் கிறிஸ்தவ மதத்தில் சுமார் 200 பிரிவுகளுக்கும் மேல் இருந்தன. பிரஸ்பிட்டீரியன், பேப்பல், எப்பிஸ்கோப்பலியன், கான்கிரிகேஷனல், மெதடிஸ்ட், யூனிடேரியன், பேப்டிஸ்ட், கிறிஸ்டியன் சயின்ஸ், ஸ்பிரிட்டிசம், எவல்யூஷனிசம் போன்ற பிரிவுகள் அனைத்தும் ஒருவிதத்தில் மதம் மாற்றும் வேலையை செய்துவந்தன. ஆனால் விஞ்ஞானத்தின் வளர்ச்சியம் ஜனநாயகக் கருத்துக்களின் வளர்ச்சியும் தான் பலரை மதப்பிரிவுகளின் மீது நம்பிக்கை இழக்கச் செய்திருந்தன.

கிறிஸ்தவ மதம் இவ்வாறு பல பிரிவுகளாக செயல்பட்டாலும், மொத்தத்தில் சற்று துவண்ட நிலையில் இருந்தது. குறிப்பாக டார்வினின் பரிணாமக் கொள்கை பைபிளின் படைப்புக் கொள்கையை முறியடித்தபோது கிறிஸ்தவ மதம் ஆட்டம் காணவே செய்தது.அதனுடன் □ உயர்தர விமர்சனம்□ என்ற பெயரில் ஜேர்மனிய அறிஞர்கள் பைபிளின் வரலாற்று உண்மைகளைப் பற்றி சந்தேகங்கள் எழுப்பினர். இந்த அமைப்பு தீவிரமாக வளர்ந்தது. வர்த்தகத் துறையின் வளர்ச்சி பணக்காரனை மேலும் பணக்காரனாக்கவும், ஏழையை மேலும் ஏழையாக்கவும் தலைப்பட்ட போது சர்ச்களின் சமுதாய நீதி பற்றி கேள்விகள் எழத்தொடங்கின.


அமெரிக்கப் பாதிரிகளால் இந்தப் புதிய அலைகளை எதிர்த்து பெரிதாக எதுவும் செய்ய இயலவில்லை . அதனால் சர்ச்களிடம் நம்பிக்கை இழந்த பல பிரிவுகள் தோன்றின. ஏறக்குறைய கிறிஸ்தவ மதம் செத்துவிட்ட நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தது.இந்தச் சூழ்நிலையில் தான் கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த 400 ஆம் ஆண்டு (1892) நெருங்கியது.கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டுபிடித்ததை தகுந்த முறையில் கொண்டாட வேண்டும் என்னும் பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்கி,



கிறிஸ்டோபர் கொலம்பஸ்

ஐக்கிய அமெரிக்க நாடுகள் காங்கிரஸ் 1890 ஏப்பிரல் 25 இல் ஒரு சட்டத்தை இயற்றியது. கலைகள், தொழில்கள், நாட்டின் உற்பத்திகள், பொருள்கள் முதலானவற்றை விளக்கும் ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய இந்தச் சட்டம் வகை செய்தது. அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹாரிசன் இந்தக் கண்காட்சிக்காக பத்து மில்லியன் டொலரை அனுமதித்தார். திட்டமிடப் பெற்ற செலவு இருபத்திரண்டு மில்லியன் டொலராகும். இந்தக் கண்காட்சி 1893 மே முதல் தேதியில் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி கிளீவ்லண்ட திறந்து வைத்தார்.கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த நானூறாவது விழாவை முன்னிட்டு சர்வதேச கண்காட்சியாக அறிவிக்கப்பட்டது.200 ஏக்கர் பரப்பில், மிக்சிகன் ஏரிக்கரை ஓரமாக இரண்டு மைல்கள் நீளத்தில் இந்த உலகக் கண்காட்சிஅமைந்தது. அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியின் சக்தியை உலகிற்கு எடுத்துக்காட்டவும் இந்த உலகக்

கண்காட்சி பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. விஞ்ஞானம், பொருளாதாரம், கல்வி, சமயம், தொழில் முதலான பல துறைகளின் வளர்ச்சிக் கட்டங்களையும் பற்றி விவாதிக்க தனித்தனி அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ' உலக கொலம்பிய் கண்காட்சி' என்றும் கொலம்பஸ் அரங்கு என்றும் பெயர் சூட்டப்பெற்று கொலம்பஸின் செல்வாக்கு உயர்த்திக் காட்டப்பட்டது.



இதன் தொடர்ச்சியாக, சிகாகோ உலகக் கண்காட்சியில், உலக சமயங்களின் பிரதிநதிகளையும் அழைத்து ஒரு சர்வமத சபையைக் கூட்ட சார்லஸ் கரோல் போன்னி என்பவர் விரும்பினார். ஏனென்றால் விஞ்ஞானத்தின் வளர்ச்சி, மதத்தின் மீது அவநம்பிக்கை போன்ற பல்வேறு காரணங்களால் ஆட்டம் கண்டிருந்த கிறஸ்தவ மதத்தை நிலைநிறுத்துவது கிறிஸ்தவர்களின் இன்றியமையாத தேவை ஆயிற்று. சர்வமத மகாசபை கூட்டுவதற்கு இது ஒரு முக்கிய காரணம். " சர்வமத மகாசபை கிறிஸ்தவ மதத்தை உலகின் தலைசிறந்த மதமாக மேன்மைப்படுத்தும்' என்று அப்போது போன்னி கருத்தும் தெரிவித்தார். பல நாடுகளிலிருந்தும் பல மதப் பிரிவினரையும் அழைத்து, அவர்களைத் தங்கள் மதத்தின் கருத்துக்களை எடுத்துக் கூறுமாறு செய்து, கிறிஸ்தவத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்பது திட்டமாக இருந்தது. ரோமன் கத்தோலிக்கர்களின் கார்டினல் (மதத் தலைவர்) கிப்பன்ஸ் இதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

சர்வமத மகாசபையை மிகவும் திட்டமிட்டு செயலாற்றியவர் உலகக் கண்காட்சியின் தலைவர் மறை திரு.ஜான்.ஹென்றி பரோஸ் என்பவர் தான். பரோஸ், சிகாகோவின் முதல் பிரஸ்பைடெரியன் சர்ச்சின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்த சமயம் ஒன்றே உண்மையான ஆற்றல வாய்ந்த சமயம் என்பதைப் பறைசாற்ற இந்து சர்வமத சபையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஹெ ன்றி பரோஸ் மற்றும் சர்வமத சபையின் கிறிஸ்தவ அமைப்பாளர்கள் எண்ணினர். பொதுக்குழுவின் தலைவர் பரோஸ் அப்பொழுது வெளியிட்ட பின்வரும் கருத்து அந்த சர்வமதசபையின் நோக்கத்தை தெள்ளத்தெளிவாக காட்டியது.

"கிறிஸ்தவ சமயம், பிற எல்லா சமயங்களையும் அகற்றும் ஆற்றலைப் பெற்றது என நாங்கள் நம்புகின்றோம். ஏன் எனில் அந்த சமயங்களில் உள்ள எல்லா உண்மையும் கிறிஸ்தவ சமயத்தில் இருக்கின்றது. அத்துடன் விமோசனம் அளிக்கும் கடவுளையும் கொண்டது"

இதைத்தான் சர்வமத சபையில் நிலைநாட்ட கிறிஸ்தவர்கள் எண்ணினார்கள்.

கிறிஸ்தவ சமயத்தின் சில பிரிவினர் சர்வமத சபை ஏற்பாட்டை கடுமையாக எதிர்த்தனர். முற்போக்கு காரணத்திற்காக அல்ல. மாறாக பிரிபைஸ்டிரியன் எனும் கிறிஸ்தவ சமயப் பிரிவினர், கிறிஸ்தவ சமயத்திற்கு சமமாக பிறசமயங்களை அழைத்துக் கூட்டுவதையே எதிர்த்தனர். அமெரிக்க கிறிஸ்தவ சமய இதழ்கள் சிலவும் பிரிபைண்டிரியன் நோக்கிலே



ஜான் மில்டன்

சர்வமத சபை ஏற்பாட்டைக் கண்டித்தன. இத்தகைய எதிர்ப்பின் உச்சக்கட்டமாக பிரிட்டனைச் சார்ந்த காண்டர்பரி (ஆங்க்லிகன் சர்ச்) ஆர்ச்பிஷப், சிகாகோ சர்வமத சபையை ஏற்பாடு செய்த குழுவிற்கு எழுதிய கடிதத்தில் தமது எதிர்ப்பை பின்வருமாறு வெளியிட்டார்.

" சர்வமத சபைக்கு வரவிருக்கும் பிற சமய உறுப்பினர்கள் கோரிப்பெறும் உரிமையையும் சரிசம நிலையையும், கிறிஸ்தவ சமயம் எவ்வாறு ஏற்க முடியும்? இது எனக்குப் புரியவில்லை" என்று தன் அறிக்கையில் அகங்காரத் தொனியுடன், இறுமாப்புடன் வெளியிட்டார்.

இத்தகைய எதிர்ப்புக்களைச் சமாளிக்க டாக்டர் பரோஸ், மாபெரும் காப்பியக் கவிஞன் ஜான் மில்டனின் பின்வரும் கருத்தை ஆதாரமாகக் காட்டினார'மில்டன் கொள்கை வழியே சர்வமத சபை ஏற்பாடு செய்யப்பட்டது அதாவது இந்தப் பூமியின் மேற்பரப்பின் மீது பலவித கருத்துக் காற்ற வீசினாலும், உண்மையே கத்தில் நிலைநிற்கும். இந்த உண்மையின் வலிமையை நாம் தவறாகச் சந்தேகித்து தீங்கிழைக்கின்றோம். பொய்மை நெருங்கிப் போராடினாலும், பகிரங்கப் போட்டியில். உண்மை வீழ்ச்சியுறுமா?'

இங்கு 'உண்மை' என்பது ' கிறிஸ்தவம்' என்றும், 'பொய்மை' என்பது பிறசமயக் கொள்கை என்றும் நுட்பமாக கிறிஸ்தவர்களுக்கு உணர்த்தப்பட்டது.

1891 இல் முதன்முதலில் நியமிக்கப்பட்ட அமைப்புக் குழுவில் கிறிஸ்தவ புரட்டஸ்டண்ட சமயப் பிரிவினர் பெரும்பான்மையினராக இருந்தனர். அவர்களுடைய ஆதிக்கமே நிறைந்திருந்தது. மொத்தப் பிரதிநிதிகள் 170 பேர். இதில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் 100 பேர். மீதி அத்தனை மதங்களுக்குமாகச் சேர்த்து 70 பேர் பிரதிநிதிகாக இருந்தார்கள்.



சர்வமத சபையின் தலைமை ஒரு ரோமன் கத்தோலிக்க மதகுருவே. ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் மிக உயர்ந்தமதகுரு கார்டினல் கிப்பன்ஸ் மேடையில் நடுநாயகமாகத் தலைமையேற்றார். கிறிஸ்தவ சமயத்தின் பிற பிரிவுகளான புராட்டஸ்டண்ட, பழைய கிரேக்கத் திருச்சபை முதலானவையும் மேடையில், கீழைநாட்டுச் சமயப் பிரதிநிதிகளுடன் அமர்ந்திருந்தனர். அதாவது சமய உலகில் கிறிஸ்தவமே தலைமை ஏற்க முடியும் என்பதைக் காட்டவே இது நிகழ்த்தப்பட்டது.. இந்த கிறிஸ்தவ பின்னணி



தெரியாமல் தான் பல சமய தலைவர்களும் அங்கு சென்றார்கள். ஆனால் உண்மையில் அந்த தீய எண்ணத்தைக் கண்டுபிடித்ததும் சுவாமி விவேகானந்தர் தான்கிறிஸ்தவர்களின் திட்டத்தை முறியடித்த ஞானி.

கல்கத்தா ' உத்போதன்' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் சிகாகோ சர்வமத சபை பற்றி சுவாமி விவேகானந்தர் எழுதியதாவது.

" சிகாகோ சர்வமத சபையில் ரோமன் கத்தோலிக்கர்கள் செல்வாக்கு ஓங்கியிருந்தது. புராட்டஸ்டண்ட சமயத்தைக் காட்டிலும் தங்கள் சமயம் உயர்ந்தது என்பதை நிறுவ ரோமன் கத்தோலிக்கர்கள் எதிர்பார்த்தார்கள். அவையில் கூடியிருந்த கிறிஸ்தவர்கள், இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள் மற்றும் பிற உலக சமயங்களின் பிரதிநிதிகளின் பலவீனங்களை பகிரங்கப்படுத்தி, தங்கள் உயர்வை நிலைநாட்ட விரும்பினார்கள். ஆனால் முடிவு வேறுவிதமாக அமைந்துவிட்டது. இதனால் மீண்டும் ஒரு சர்வமத சபையைக் கூட்டுவதற்கு ரோமன் கத்தோலிக்கர்கள் எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கினர்."

சிகாகோவில் இருந்து 1895 இல் எழுதிய கடிதத்திலும், 'கிறிஸ்தவ சமயத்தின் உயர்வைக் காட்டுவதற்காகவே சர்வமத சபை கூட்டப்பெற்றது' என்று சுவாமிஜி குறிப்பிட்டார்.

கிறிஸ்தவர்களின் எண்ணத்தை சம்மட்டியால் அடித்து நொறுக்கி உடைத்து, இந்து சமயமே உலகிற்கு தலைமை தாங்க தகுதி வாய்ந்த சமயம் என்பதை சுவாமிஜி பறைசாற்றினார். அந்த வரலாறு அனைவரும் அறிந்தது...

# கணேசன் சென்ரர்

இணுவில் பதியில் மக்கள் போற்றும்
மகத்தான ஐவுளி சமுத்திரம்.

**சேலைகள், பட்டுச்சேலைகள், சுடிதார்கள், சல்வர்கள், ஆண், பெண் சிறுவர்களுக்கான றெடிமெற் ஆடைகள், அழகு சாதனப்பொருட்கள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.**

***K.S.S.*** வீதி
இணுவில்

தொலைபேசி இலக்கம்
021 2241508

# திருவருள் மிகு விக்னேஷ்வரா சோதிட நிலையம்

**மட்டு மாநகரிலே!**

சிறந்த முறையில் உங்கள் ஜாதக பலனை அறிந்து கொள்ள, புதிய ஜாதகங்களைக் கணித்துப் பெற்றுக்கொள்ள, நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

தொடர்புகளுக்கு :- தேசகீர்த்தி கிரியா ஜோதி,
ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ.ஜி.என் திருக்கணேஸ்வரக் குருக்கள் **(J.P) (PIMP)**,
கோகுலம், ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் வீதி குருக்கள் மடம், மட்டக்களப்பு.

சந்திக்கும் காலங்கள் :- புதன், சனி தவிர்ந்த ஏனைய நாட்களில்

காலை :- 7.30 11.30 வரை

தொலைபேசி :- 065 2250259, 077 8900557


என்றும் மக்கள் விரும்பிப் பயன்படுத்துவது
அண்ணா தயாரிப்புகளே
அண்ணா கோப்பி
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
அண்ணா ரோபி
குரக்கன் மா
ஆட்டா மா
உழுந்து மா
வறுத்த அரிசி மா
பச்சை அரிசி மா
அருந்துங்கள்...
ANNA COFFEE
ANNA COFFEE
ANNA COFFEE
අන්නා කෝපි
அண்ணா கோப்பி
தலைமை அலுவலகம்
அண்ணா தொழிலகம், இனுவில்
கிளை : 4 நவீன சந்தை , யாழ்பாணம்